# திசை

THISAI



**New Science Academy**

IN FRONT OF B. M. C. — JAFFNA

90 A/L DAY CLASS

PHYSICS — மணியம்
CHEMISTRY — சண்
BOTANY — குணசீலன்
ZOOLOGY — தங்கராஜா
PURE / APP } MATHS — பிரேம்நாத்

ஆரம்பம் : 1. 1. 1990



திசை 1 | 22-12-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 50


# 6-வதுசரத்து நீக்கப்பட வேண்டும்

**"இலங்கை அரசியல்யாப்பில் உள்ள ஆருவது சரத்து நீக்கப்படாதிருக்கும் வரை, நாங்கள் தேர்தலில் வெற்றி பெற்றபோதும் நாடாளுமன்றத்துக்குச்சென்று சத்தியப்பிரமாணம் எடுக்கமுடியாத நிலையே உருவாகும்" — இவ்வாறு விடுதலைப் புலிகளின் புதிய அரசியல் கட்சியான "விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி"யை நேற்று ஆரம்பித்துவைத்ததின், பின்னர் அதன் செயலாளர் யோகி கூறினுர். இதை நேற்று பி. பி. சி. வானெலி அறிவித்துள்ளது.**

விடுதலைப் புலிகள் இயக்கம் ஜனநாயக வழி அரசியல் நீரோட்டத்தில் கலந்து கொள்ளும் முகமாகவே இப்புதிய அரசியல் கட்சி ஆரம்பிக்கப்பட்டதாகவும், தமிழ் முஸ்லிம் மக்களின் சுயநிர்ணய உரிமை, அவர்களின் பாரம்பரிய தாயக எல்லை போன்றவற்றைப் பாதுகாப்பதும், பெண்களின் அடக்குமுறையை எதிர்த்தல் நவகொலனித்துவ ஏகாதிபத்தியப் போக்குகளுக்கு எதிராகப் போராடும் தேசிய, சர்வதேசிய விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவு வழங்குதல். ஜனநாயக சோஷலிஸத்தைக் கடைப்பிடித்தல் என்பனவே இதன்பிரதானநோக்காகஇருக்கும், என மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. 'மாத்தையா' எனப்படும் மகேந்திரராஜா இதன் தலைவராகவும் யோகி எனப்படும் போகரத்தினம் இதன் செயலாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

'விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணி' பற்றி இந்திய வானெலி அறிக்கையில் இப்புதிய கட்சியின் தோற்றம் எல். ரி ரி ஈ. யினர் ஜனநாயக வழிக்குத் திரும்பியுள்ளதையே இது காட்டுகிறது, எனக் கூறியது.

**அன்ரன் பாலசிங்கம் அறிவிப்பு**

புதிய கட்சியை ஆரம்பித்து வைத்தகின் பின்னர் இது

(8 ஆம் பக்கம் பார்க்க)

## வானெலியில் செய்தித்தாள் கண்ணேட்டம்

இப்பொழுது இலங்கை வானெலியில் காலைச் செய்தி அறிக்கையின் பின் 'செய்தித்தாள் கண்ணேட்டம்' என்ற நிகழ்ச்சியை ஒலிபரப்புகிறுர்கள். கொழும்பிலிருந்து வெளிவரும் தமிழ். ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவரும் பிரதான செய்திகளை இதில் வாசிக்கிறுர்கள். இநநிகழ்ச்சியை பலரும் விரும்பிக் கேட்கிறுர்கள். இலங்கை வானெலியின் மத்திய அலை ஒலிபரப்பு இப்பொழுது வடபகுதியில் தெளிவாக கேட்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

## சிங்கள இளைஞர்களுக்கு இந்தியப்படை பயிற்சி

மக்கள் தொண்டர் படைக்காக இந்திய ராணுவத்தினரால் திருகோணமலை பகுதியிலுள்ள இந்திய ராணுவ முகாம்களில் சிங்கள இளைஞர்கள் ராணுவப் பயிற்சி பெறுவதாகவும், இத்தகைய பயிற்சி பெற்றவர்கள் மக்கள் தொண்டர்படையில் சேர்க்கப்படவுள்ளதாகவும், இலங்கையிலுள்ள நாளிதழ் ஒன்றின் செய்தி வெளியீட்டின் பேரில் அது பற்றிய விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

மேற்படி சிங்கள இளைஞர்களுக்கான பயிற்சி இடதுசாரிச் சார்புடைய தொழிற்சங்கம் ஒன்றின் ஆதரவுடன் நடைபெறுவதாகவும் மேலும் அப்பத்திரிகை கூறியுள்ளது.

## றுமெனியாவில் இன்ஞெருதியனென்மென்

றுமெனியாவில் மக்கள் அடக்கு முறைக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்துள்ளதாகவும், அதை அடக்குவதற்கு அரசு பயங்கர ஆயுதங்களையும், ராங்கிகளையும் கட்டவிழ்த்துவிட்டிருப்பது, இன்ஞெரு தியனென்மென்னை நினைவூட்டுவதாக செய்திகள் வந்துள்ளன. றுமெனியாவின் நகரான டிமிசோரா வீதிகளில் பிணங்கள் குவியல் குவியலாகக் கிடப்பதாகவும்; கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைமைச் செயலகம், இன்னும் அரச கட்டிடங்கள் மக்களால் தீயிடப்பட்டு எரிந்து கொண்டிருப்பதாகவும் மேலும் செய்திகள் கூறுகின்றன.

கடந்த கால் நூற்றுண்டுகளுக்கு மேலாக ஜனுதிபதி நிக்கலோய் செஸேஸ்குவின் அடக்கு முறையின் கீழ் பலவித கொடுமைகளுக்குள்ளான மக்கள், தற்போது அண்டைய கிழக்கு ஐரோப்பிய நாடுகளைப் பின்பற்றி கிளர்ந்தெழுந்துள்ளனர்.

## சாராயம், எரிபொருள் அருந்தல்

யாழ். குடாநாட்டில் சாராயம், பெற்றேல் ஆகியவற்றுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது. எல்லாவகைச் சாராயங்களும் போத்தல் ஒன்றுக்கு ரூபா 30/= விலை கூடியுள்ளது. சாராயத் தட்டுப்பாடு காரணமாக மறுபடியும் சில இடங்களில் கசிப்பு வியாபாரம் தலைதூக்கியுள்ளது. அத்துடன் சில சாராயக் கடைகளும் பூட்டப்பட்டுள்ளன.

## ஸகரோவின் மரணம்

சோவியத்தின் மனிதஉரிமைவாதியும் சமாதானத்துக்கான நோபல் பரிசு பெற்றவருமான ஸகரோவின் மரணம் குறித்து அநேக நாட்டுத் தலைவர்களும் முக்கியஸ்தர்களும் தமது அஞ்சலியைத் தெரிவித்தனர்.

போலந்து சொலிடாரிட்டித் தலைவர் வெலேசாவும் மொஸ்கோ சென்று நேரடியாகத் தனது அஞ்சலியைச் செலுத்தினுர்

**அனைவருக்கும் எமது நத்தார் வாழ்த்துக்கள் உரித்தாகுக.**

## 10 விடுதலைப் புலிகளுக்கு மாகாண சபையில் இடம்

"வடக்கு கிழக்கு மாகாண சபையில் 10 ஆசனங்களை விடுதலைப்புலிகளுக்கு வழங்க நாம் தயாராய் உள்ளோம். ஆனல் மாகாணசபையையோ மககள் தொண்டர்படையையோ கலைப்பதற்கு அனுமதிக்கமாட்டோம்" இவ்வாறு நான்கு அமைப்புகள் ஆணைந்த தமிழ்த் தேசிய சபை அறிவித்துள்ளது அது மேலும் கூறுவதாவது:

"தமிழ்ப்பகுதிகளில் ஜனநாயக அரசியலை நிலைநிறுத்துவதற்காக பல தியாகங்களைச் செய்து பெறப்பட்டவை இவையாகும். வடக்கு கிழக்கு வாழ் மக்களுக்கு தனி அரசு, தனி ஈழம், தனி ராணுவம் ஆகியவற்றைப் பெற உரிமையுண்டு. இந்நிலையில் ஏற்கெனவே அமைக்கப்பட்ட மாகாணசபை, மக்கள் தொண்டர் படை ஆகியவற்றைக் கலைப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது."

## நம்பிக்கை வாக்கெடுப்பு

வி. பி. சிங். தலைமையிலான இந்திய அரசு மீதான நம்பிக்கை வாக்கெடுப்பு இன்று லோக்சபாவில் நடைபெறுகிறது

தனிக்கட்சி என்ற முறையில் இந்திரா கொங்கிரசே பெரும்பான்மை உடைய கட்சியாக உள்ளது என்பதும். ஏனைய பல கட்சிகளின் ஆதரவுடனேயே தேசிய முன்னணி அரசு அமைத்துள்ளது என்பதும் தெரிந்ததே.

## தாக்குதல்

அமெரிக்கா பனுமா மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தி பனுமா அரசை கவிழ்த்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இத்தாக்குதலினுல் பெரும் தொகையான பொதுமக்களும் பல அமைச்சர்களும் இறந்துவிட்டதாகவும் ஆனுல் அந்நாட்டின் ஜனுதிபதி கோர்ஜேவா பிடிபடாமல் தப்பிவிட்டதாகவும் தெரியவருகிறது.





'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்—ரூபா: 225/-
அரைவருடம்—ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்—ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் —
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் —
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரப் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு.
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# யாழ். நகரில் மின்சாரக் கோளாறு அதன் இரகசியம் என்ன?

"வெளிச்சத்தையும் இருளையும் தேவன் வெவ்வேறுசப் பிரித்தார்" (வேதாகமம்) ஆனால், யாழ். நகரிலும், அதனை அண்டியகிராமங்களிலும் நாம் அடிக்கடி இரவிலும் பகலிலும் 'வெளிச்சத்தை'க் காண முடியாமல் மின்தடையினுல் அவதியுறுகிறோம். இதனுல் இலங்கை மின்சாரசபையும், யாழ் மாநகர சபையும் வரியிறுப்பாளரின் கண்டனத்துக்குள்ளாகியிருக்கின்றன. சொல்லாமல் கொள்ளாமல் 'இருட்டடிப்பு' நேர்வதற்கு யாழ். மாவட்டத்துக்கு வெளியே மின் அழுத்தத்தை மாற்றும் இணைப்புக் கருவிகள் நாசமாக்கப்படுவதும் ஒரு காரணமாகும். எது எப்படியாயினும், அவற்றைச் சீர் செய்த பிற்பாடும் இன்னமும் முழுமையாக சில பகுதிகட்கு, மின்வலுக்கூடிய நேரங்களில் அதுவும் குறிப்பாக மாலை 6.30-7.30 மணிவரை, காலை 9 முதல் 11. 30 மணி வரை மின்சாரம் கிடைக்காமல் கோளாறு ஏற்பட்டுக் கொண்டு தான் இருக்கிறது.

இது தொடர்பாக இலங்கை மின்சார சபை உயர் அதிகாரி ஒருவரைச் சந்தித்த போது..... "இலங்கையில் ஏகபோக மின்சார விநியோகஸ்தர் மின்சார சபைதான். மின்சாரத்தை உள்ளூராட்சி மன்றங்கள் எம்மிடமிருந்து மொத்தமாக வாங்கி, தமது அதிகார எல்லைக்குட்பட்ட பாவனையாளர்களுக்கு விற்கின்றன. உள்ளூராட்சி மன்றங்களின் மின் விநியோகத்துக்கும் எமக்கும் தொடர்பில்லை. அவர்கள் எம்மிடமிருந்து மொத்தமாக வாங்கி விநியோகிக்கையில் மின்தடை, மின்கோளாறுகள் ஏற்படும் போது அவற்றை அவர்களே நிவர்த்தி செய்ய வேண்டும்."

"எமது கண்காணிப்பில் 70 மின் அழுத்த மாற்றுக் கருவிகள் (டிரான்ஸ்போமர்கள்) உள்ளன இதில் யாழ் மாநகர சபை மின் அழுத்தத்தை மாற்றும் 27 கருவிகளும் அடங்கும். அது மட்டுமல்லாமல், மின்சார சபை ஆனைக்கோட்டை, கோண்டாவில், கோப்பாய் கிராமங்களுக்கு நேரடியாக மின்சாரத்தை வழங்குகிறது இக்கிராமங்களில் உள்ள கிராமச் சபைகளும் சில பகுதிகளுக்கு, மின்சாரத்தை எம்மிடமிருந்து வாங்கி விநியோகிக்கின்றன. கிராமச் சபைகள் வழங்கும் மின்சாரத்தில் ஏற்படும் கோளாறுகளுக்கு அவர்களே காரணஸ்தர்" என்றார் அந்த அதிகாரி.

அவர் தொடர்ந்து கூறியதாவது;

"கடந்த காலங்களில் மின்சாரம் எப்படியிருந்ததென்று உங்களுக்குத் தெரியுமா? வடமாகாணத்துக்கு வெளியே, வடமாகாணத்துக்கு மின்சாரம் வழங்கும் இணைப்புக் கருவிகள் நாசப்படுத்தப்பட்ட பிறகு, 130 கிலோ வோல்ற்ஸ் மின்சாரத்தையே நாம் இப்போது பெறுகிறோம். இது நாம் முன்பு பெற்றதை விட 50% குறைவாகும். இதனுல் பகல் 9 முதல் 11.30 வரை, மாலை 6.30 - 7 30 வரை சில பகுதிகட்கு, மின்வலு கூடிய நேரத்தில், குறிப்பாக இரவில் மின் தடை ஏற்படலாம்.

"நாம் மூன்று பிரிவுகளாக நேரடியாக மின்சாரம் வழங்குகிறோம். ஆறு உள்ளூராட்சி மன்றங்கள், கிராமிய மின் விநியோகத் திட்டத்தின் கீழ்வரும் கிராமங்கள் நேரடியாகவே எம்மிடமிருந்து மின் வலுவைக் கொள்வனவு செய்யும் போதனு ஆஸ்பத்திரி, பல்கலைக் கழகம், சில தொழிற்சாலைகள் இதில் அடங்கும். இந்த மின்சாரத்தில் ஏற்படும் தடைகளில் எமக்கும் பொறுப்புண்டு. ஆனல், யாழ். மாநகர சபை மின் இணைப்புகளில் பியூஸ் (Fuse) பழுதடைவதற்கும் எமக்கும் தொடர்பில்லை."

மேற்கூறிய பேச்சாளரைச் சந்தித்து விட்டு, நல்லூருக்குப் புறப்பட்டு வந்து, யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவரைச் சந்தித்த போது, தன்னை இனங்காட்ட விரும்பாத அந்த அதிகாரி கூறியதாவது;

"மின்தடை ஏற்படுவதற்குக் காரணம் நாமல்ல. சுன்னுகத்திலிருந்து, மின்சாரசபை வலுக்கூடிய நேரங்களில் சுழற்சி முறையில் மின்சாரத்தை சில பகுதிகளுக்குநிறுத்திவிடுகிறது. இதை விட யாழ் மாநகரசபை எல்லைக்குள் தற்போது அடிக்கடி ஏற்படும் மின்தடைகளுக்குக் காரணம், திருத்த வேலைகளாகும். சமீபத்திய அனர்த்தங்களின் போது, அழிந்த, அல்லது சேதமடைந்த மின்கம்பிகளின் திருத்த வேலைகள் நடைபெறுகின்றன. இதனுல் ஏற்படும் இத் தடைகள் தவிர்க்க முடியாதவை. திருத்த வேலைகளுக்காக ரூபா 10.8 மில்லியன் ஒதுக்கப்பட்டுள்ளது. 34 மின் லயின்களிலும், ஓட்டுமடம் சந்தி, கண்ணபுரம், குருநகர், பாஷையூர் ஆகியவற்றில் உள்ள உப மின்நிலையங்களிலும் திருத்த வேலைகள் இடம்பெறுகின்றன. கொன்வென்ற் சந்தி உபமின் நிலைய வேலைகள் பூர்த்தியாகி விட்டன. வேலைகள் பூர்த்தியாகிய இடங்களுக்கு ஒழுங்காக மின்வலு வழங்கப்படும்."

தன் உதவியாளரின் அனுசரணையுடன் அந்த அதிகாரி தொடர்ந்து கூறியதாவது: "மின்சாரத் திருட்டாலும் மின் தடை ஏற்படலாம்; ஒரு பகுதியே இருளில் மூழ்கக்கூடிய அபாயம் இதில் உண்டு. மின் திருட்டு, மீற்றரை மாற்றிய மைத்தல் ஆகியன தடைசெய்யப்பட வேண்டும். கசிப்பை முற்ருக ஒழித்துக் கட்டியது போல், களவாக மின்சாரம் எடுப்பதையும் தடை செய்ய வேண்டும். இல்லாது போனுல் மின்தடை ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது. சில சட்டவிரோத மின் பாவனையைத் தடை செய்யச் சென்ற எமது ஊழியர்கள் அடி வாங்கியதும் உண்டு. இதனுல் அவர்கள் அப்பகுதிகளின் பக்கம் தலை வைத்தும் படுப்பதில்லை.

விசேட நிருபர்

## யாழ். மாநகரசபைக்கு நாளொன்றுக்கு ரூ. 40,000 நஷ்டம்

"மின்சாரத்தைத் திருடுவதற்குக் காரணம் என்ன?" என்று பேச்சைஆரம்பித்தேன். அப்போது அவர்......

"யாழ். மாநகரசபையின் அதிகார எல்லைக்குள் 18,400 சட்டபூர்வமான மின்பாவனையாளர் உள்ளனர். நாம் 10% எல்லை லாபத்தை வைத்தே மின்சாரத்தைக் கொள்வனவு செய்கிறோம். அத்துடன் சமீபத்தில் ஏற்பட்ட மின்கட்டண உயர்வால் மின் திருட்டும், மீற்றரை மாற்றும் வேலையும் நடைபெறுகின்றன. இதனுல் யாழ். மாநகர சபைக்கு நாளொன்றுக்கு ரூபா 40,000 நஷ்டம் என்றுல் பாருங்கள்" என்று அங்கலாய்த்தார்.

யாழ். மாநகர சபையும், மின்சார சபையும் மின்சாரத் தடைச் சம்பவங்களோடு தங்களுக்குள்ள தொடர்பை மறைத்துக் கொண்டு தப்பிக்கப் பார்க்கின்றன. இது தொடர்பாக யாழ். நகரில் பிரபலஸ்தரானடொக்ரர் பிலிப்ஸ் மந்திரி பெஸ்டஸ் பெரேராவுக்கு எழுதிய ஆங்கிலக்கடிதத்தின் பிரதியின் தமிழாக்கத்தை தருகிறோம். இதுதான் உண்மை நிலைவரம்.

207, 228, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
16. 12. 1989.

டொக்ரர் ஜே. பி. சி.
பிலிப்ஸ் J. P.
கௌரவ அமைச்சர் பெஸ்ரஸ் பெரேரா, சக்தி மின்வலு அமைச்சர், இலங்கை மின்சார சபைக் கட்டிடம், பாங்சல்ஸ் ஸ்ரேட், கொழும்பு-1.
ஐயா,
யாழ்ப்பாண நகரில் உள்ள எமது பகுதிக்கு மின்சாரம் விநியோகம் தொடர்பாக தொடர்ச்சியான பிரச்சினைகள் உள்ளன. இலங்கை மின்சார சபை வட பிராந்திய அலுவலகத்தோடும், யாழ். மாநகர சபையோடும் நாம் கடிதத் தொடர்புகொண்டிருந்தோம். அக் கடிதங்களின் படப்பிரதிகள் இத்துடன் இணைக்கபபட்டுள்ளன. இந்த இரு அலுவலகங்களின் உதவியை நாடிய சமயம் நாம் அங்கும் இங்குமாக அலைக்கழிக்கப்பட்டோம். ஒன்றும் செய்யமுடியாத இந்த நிலையில், இவ் விடயத்தில் உங்கள் உதவியை நாடுகிறோம்.
நன்றி.
உங்கள் கீழ்ப்படிவுள்ள,
டொக்ரர் ஜே. பி. சி. பிலிப்ஸ்

## எழுத்தாளர் பயிற்சி நெறி

அறவழிப் போராட்டக்குழுவினுல் நடாத்தப்படவிருக்கும் இளம் எழுத்தாளர் பயிற்சி நெறி இம்மாதம் 29, 30, 31 ஆம் திகதிகளில் கைதடி நவீல்ட் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

கலாநிதி எஸ். மௌனகுரு இப்பயிற்சியை நெறிப்படுத்துகின்றார்.

"நமச்சிவாய வாழ்க
நாதன்றாள் வாழ்க
இமைப்பொழுதும்
என் நெஞ்சில்
நீங்காதான் தாள் வாழ்க"

மார்கழி மாதத்து வைகறைப் போதில் மாதேவன் வார்கழல்கள் வாழ்த்தி வணங்கிட,

"திருப்பள்ளியெழுச்சி, திருவெம்பாவை நூலையும். "ஓம் சிவசிவ" ஸ்ரிக்கரையும் பெற்றிட,

மில்க்வைற் மேலுறையிலிருந்து 25 திருக்குறள் அனுப்பிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

அறிவுப் பசிக்கு அரியவிருந்து!
நான் உளவியல் மஞ்சரி வெளியீடுகள் படித்துவிட்டீர்களா?
புதிய வெளியீடு:
ஆரிரோ பாலா
(கிறிஸ்மஸ் பாடல்கள் ஒலிப்பதிவு நாடா)
கிடைக்குமிடம்: வசந்தகம்
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.

Diploma in Computer Programming and Data Processing

Basic Language
மிகவும் பிரபலமான இலகுவில் பயிலக்கூடிய கொம்பியூட்டர் மொழி.
காலம் — 4 மாதங்கள்
ஆரம்பம் — 28—12—89

dBase III +
A Job — oriented Computer Course
Duration — 1½ Months
Commencement — 30-12-89

Word Processing
A Job — oriented Computer Course
Duration — 1 Month
Commencement = 28-12-89

C. I. M. A., I. D. P. M., Book - Keepers., Shorthand & Typing
இப்பொழுதுதான் ஆரம்பமாகியுள்ளன.

- Lectures by Members of the Institute of Data Processing Management (London)
- Practicals on I. B. M. (Compatibles)
- More Hours of Practicals
- தமிழிலும் விளக்கங்கள்
- Fees can be paid in instalments

For furthur details.

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(LEADERS IN COMPUTER EDUCATION)
16.3-ம் குறுக்கு வீதி,
(OLR தேவாலய மேற்குப் பக்கம்)
யாழ்ப்பாணம்.

# விடைபெறும் 89உடன் ஒரு பேட்டி

## அது விட்டுச்செல்லும் சமிக்ஞை என்ன?

கேள்வி: வணக்கம், 89 அவர்களே! நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து போகவிருக்கும் இக்கடைசி நேரத்தில் உங்களிடம் சிலவற்றை அறிந்து போகலாம் என வந்துள்ளேன்.

89 : சரி, கேளுங்கள்.

கே : உங்களுடைய இவ்வோராண்டு ஆட்சிக் காலம் உங்களுக்குத் திருப்தி தருவதாய் உள்ளதா?

ப : நிச்சயமாகத் திருப்தி தருவதாய் உள்ளது.

கே : என்ன ரீதியில் என்று சொல்வீர்களா?

ப : பெரிய மாற்றங்கள் உலகில் ஏற்பட்டுள்ளன. ஏற்பட்டு வருகின்றன.

கே : எக்காலத்திலும் மாற்றங்கள் ஏற்பட்டுத்தான் வந்துள்ளன. மாற்றங்கள் ஏற்படாத காலம் என்ற ஒன்றுண்டா?

ப : உண்மை. ஆனால் என்னுடைய ஆட்சிக்காலம் முற்போக்கான மாற்றங்களைக் கொண்டதாய் உள்ளது. முன்னெப்பொழுதுமில்லாத, குண ரீதியான அடிப்படை மாற்றங்களைக் கொண்டுள்ளதால் அது எனக்குப் பெருமை தருகிறது.

கே : இதை விளக்குவீர்களா?

ப : நான் கூறும் அடிப்படை மாற்றம், அரசியல் அல்லது பொருளியல் அல்லது சமூகம் அல்லது விஞ்ஞானம் என்றஒரு துறைக்குள் அடங்குவதல்ல. சகல துறைக்குள்ளும் ஏற்பட்டுவரும் அடிப்படையான மாற்றம், ஒன்றை ஒன்று பாதிக்கும் மாற்றம்.

கே : இதற்கு சில உதாரணங்கள் மூலம் கோடி காட்டுவீர்களா?

□ சிவா □

ப : காட்டலாம். இன்று உலகின் சகல பாகங்களிலும் அடக்குமுறைக்கெதிரான கிளர்ச்சியும் போராட்டமும் நிகழ்ந்து வருகின்றன. கடந்த காலங்களில் ஊமைக் காயங்களின் எரிவாய் இருந்த பிரச்சினைகள் இன்று எரிமலைச் சிதறலாய் வெடித்து குழம்புகள் கக்கத் தொடங்கியுள்ளன. ரஷ்யாவின் 'பெரிஸ்றோய்கா' கொள்கைப் பிரகடனம், அதன் உள்நாட்டிலும் அதனோடு சேர்ந்து அணிநின்ற கிழக்கு ஐரோப்பா நாடுகளிலும் ஒரு அடிப்படைச் சுழற்சியையே ஏற்படுத்தி விட்டது. ஸ்ரலின் காலத்து அடக்குமுறைக்கு எதிரான பெரும் பாய்ச்சல். இந்தப் பாய்ச்சல் சீனவையும் விட்டு வைக்கவில்லை. அங்கெழுந்த மாணவர்களின் பெரும் புரட்சி, இரத்தமும் சதையுமாகப் பிய்த்தெறிந்து அடக்கப்பட்டாலும் வரப்போகும் இன்னோர் பேரலையின் சமிக்ஞையாகும். தகர்க்கப்படவிருக்கும் பேர்லின் பெருஞ்சுவர், பல் உடைக்கப்பட்டு வரும் தென்னாபிரிக்க இனவெறி ஆட்சி, அதற்கு முண்டு கொடுத்த தட்சர் போன்ற இனவெறிப் பிற்போக்குச் சக்திகளுக்கு பொது நல நாடுகள் அமைப்புக் கொடுத்த பலத்த குட்டு, கம்பூச்சியாவிலிருந்து வியற்நாமியப் படைகளும் ஆப்கானிஸ்தானிலிருந்து சோவியத் படைகளும் வெளியேறியமை, அதன் ஆக்கிரமிப்புப் போக்காளருக்கு விழுந்த அடி, கடந்த மாதம் எல்சல்வடோரில் அமெரிக்க பொம்மை அரசுக்கு எதிராகத் தீவிரவாதிகள் நிகழ்த்திய மிகப் பெரிய தாக்குதல்; பிலிப்பைன்ஸ் சதிப் புரட்சி, இந்தியாவில் நேர்ந்த அடிப்படையான ஆட்சிமாற்றம், இலங்கையை உலுக்கும் ஜே.வி.பி. கிளர்ச்சி, தமிழர்களின் விடுதலைப் போராட்டம், என்று கூறிக்கொண்டே போகலாம். இத்தகைய நிகழ்வுகளை தம் நாடுகளில் காணாத ஒரு சில நாடுகள் கூட இச் சுழற்சியால் அள்ளுப்பட்டு, அதற்கேற்ப தம்மைச் சுதாகரித்துக் கொள்ள வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன.

கே ; உதாரணம் காட்டுவீர்களா?

ப : அமெரிக்கா.

இன்று ரஷ்யாவின் பெரிஸ்றோய்க்கா அமெரிக்காவையும் பாதித்துள்ளது. பழைய யுத்த கெடுபிடிகள் நீங்கியதால் ஆயுதக்குவிப்பு அனாவசியமாக்கப்பட்டுள்ளது. இதன் யுத்தநோக்கின் அடிப்படையில் நிறுவப்பட்ட நேட்டோ, வோர்சோ அணிகள் குலைக்கப்பட்டுள்ளன. இவை சமூக, பொருளாதார ரீதியில் பல அடிப்படையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளன.

கே : எவ்வாறு?

ப : பழைய யுத்த ஆபத்துப் பார்வை அகல, ஆயுதக் குறைப்புகள் வல்லரசுகளிடையே ஏற்பட, அதற்குரிய செலவு மிச்சம் பிடிக்கப்படுகிறது. இப்படி மிச்சம் பிடிக்கப்படும் பணம் வளர்முக, வறிய மூன்றும் உலக நாடுகளுக்கு வறுமையால் சாகும் அதன் மக்களையும் சிறுவர்களையும் காப்பாற்றத் திருப்பப்பட வேண்டும் என்ற புதிய பார்வை வலுக்கிறது.

கே : வேறு மாற்றங்கள்?

ப : ஒவ்வொரு தேசிய இனமும் தன் தனித்துவத்துக்காகப் போராடும் அதேவேளை சர்வதேச ரீதியான ஒருமைப்பாட்டை நோக்கியும் உலகம் செல்கிறது. 'ஐரோப்பிய சமூகம்' என்னும் வாதம் இதன் ஆரம்பம்.

கே : இந்த மாற்றங்களுக்குரிய காரணம்?

ப : விஞ்ஞான, நாகரிக முன்னேற்றம் எனலாம். "ஆயிரக் கணக்கான மைல் தொலைவிலிருந்து செய்மதிகள் சமயப்புத்தகங்களை வாசிக்கும் இந்நாளில் ஸ்ரலின்கால அடக்குமுறை நின்று பிடிக்குமா?" என்று போலந்து தலைவர் வெலிசா கேட்பதில் உண்மை உண்டு. இன்றைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புகள் பழைய இரும்புத்திரை நடவடிக்கைகளை செல்லாக்காசாக்கியுள்ளதோடு, உலகையே ஒரு குடைக்குக் கீழ் கொண்டுவரும் சக்தியைப் பெற்றுள்ளன. சீன மாணவரை அதனால்தான் சீனாவால் இரும்புத் திரைக்குள் திணிக்கமுடியவில்லை.

கே : வேற்றுலகங்களில் இருந்து மனிதர்கள் வரும் கதை உண்மையா?

ப : இதை விட ஆச்சரியமானவை நிகழலாம். மறுபிறப்பு பற்றி பல நாடுகளில் நடக்கும் ஆய்வுகள் இதற்கு எடுத்துக்காட்டு.

கே : இதன் விளவு?

ப : எதிர்காலத்தில் மனிதனின் சமயம் என்பது ஒரு முழு மதப்பார்வையை (Total Religion) நோக்கி எழலாம். □

# விடுதலை நோக்கிய நகர்வு

"ஆண்டவருடைய ஆவி என்மேலே. ஏனெனில், என்னை அபிஷேகம் செய்துள்ளார். எளியோர்க்கு நற்செய்தி சொல்லவும், சிறைப்பட்டோர் விடுதலையடைவர், குருடர் பார்வை பெறுவர், என அறிவிக்கவும், ஒடுக்கப்பட்டோர்க்கு உரிமை வாழ்வு வழங்கவும், ஆண்டவர் அருள்தரும் ஆண்டினை அறிவிக்கவும், அவர் என்னை அனுப்பினார்." (லூக். 4/18-19).

கிறிஸ்துவின் மேற்படி கூற்று அவரது இலட்சியத்தை வெளிப்படுத்துவதாய்க் காணப்படுகின்றது.

கிறிஸ்துவின் மனிதனுதல் நிகழ்ச்சி, வரலாற்றிலேயே பிரதானமான இடத்தை வகிக்கின்றது. கிறிஸ்துவுக்கு முன், கிறிஸ்துவுக்கு பின், என வரலாறே கிறிஸ்துவின் பிறப்பினால் இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. மனித குலம் முழுவதுமே பாவத்தில் மூழ்கியிருந்த நிலையில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்துவதாய்

**வின்சன்ற் பற்றிக்**
**(அ. ம. கி.)**

கிறிஸ்துவின் பிறப்பு அமைகின்றது. மனிதன் மற்றைய மனிதரிடமிருந்து, இறைவனிடமிருந்து பிரிக்கப்பட்டு, தன்னிலேயே அமைதியற்றுக் காணப்பட்ட பொழுது, அவனை முழு மனித விடுதலைப் பயணத்தில் நகரவைத்தார் கிறிஸ்து.

"உன்னதங்களிலே கடவுளுக்கு மகிமையுண்டாகுக, உலகிலே அவர் தயவு பெற்றோர்க்கு அமைதி ஆகுக." (லூக். 1/14) என்ற வானோரின் நற்செய்தி, முதன்முதலில் ஏழை இடையர்களுக்கே அறிவிக்கப்பட்டது. ஏழ்மை நிலையில் பிறந்த கிறிஸ்து, பல்வேறு மட்டங்களில் ஏழைகளாய் வாழ்ந்த அனைவர்க்கும் ஏற்றம் கொடுப்பவராய்க் காணப்படுகின்றார். ஆன்மீகத்தில், பொருளாதாரத்தில், பண்பாட்டினில் பலவீன முற்று வாழும் அனைவரையும் தொட்டு, இணைப்படுத்தி, பலப்படுத்தும் ஆற்றல் கிறிஸ்துவிடம் காணப்பட்டது.

ஆயினும் இன்றும் அமைதியற்ற சூழலை, குழப்பம்நிறைந்த சமுதாயத்தினை எதிர்கொள்ளுகின்றோம். பாகுபாடு, பிரிவினை, சுயநலம் போன்றவை அதிகரிக்கின்றன. மனித உயிர் மதிக்கப்படாத நிலையில் இரத்தம் சிந்தப்படுகின்றது. மனிதன் மனிதனால் வாதைப்படுத்தப்படுகின்றான்; மனித மாண்பு சிதைக்கப்படுகின்றது. உண்மையான அன்பு, உண்மையான உறவு குறைந்து கொண்டே போகின்றது. உலகத்தினில், சமூகத்தினில், குடும்பத்தினில், தனி மனித வாழ்க்கையினில் நிலவும் சமச்சீரற்ற தன்மையினைச் சீர்ப்படுத்த இன்றும் கிறிஸ்துஎனும் ஒளிவிளக்கே தேவைப்படுகின்றது.

இன்றும் அதே கிறிஸ்து எமது பாவ வாழ்க்கையில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்த முற்படுகின்றார். எனக்காக, எனது குடும்பத்திற்காக மட்டும் வாழுகின்ற சுயநலச் சிறையிலிருந்து விடுபட்டு மனித நேயத்தை, சமுதாய நலனை, ஏழை, எளியவரின் சுபீட்சத்தை முதன்மைப்படுத்தி வாழ அவர் எம்மைத் தூண்டுவிக்கின்றார். எல்லோரும் இறைவனில் ஒன்றாகி, நன்றாக நாம் வாழ யேசு பாலன் எம்மை ஆட்கொள்வாராக. நத்தார் நல்வாழ்த்துக்கள்! □

# சூரிய சக்தியில் இயங்கும் ரெஃப்ரிஜிரேட்டர்

சூரிய சக்தியை அனல் மின்சாரமாக மாற்றுவது, சூரிய சக்தி பொறியியலில் மிகவும் பயனுள்ள, வாய்ப்புள்ள எதிர்காலத் திசைவழி என்று கீவ் நகரில் உள்ள தொழில்நுட்ப அனல் பௌதீக— ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். அதனால் தான் சோவியத் பொறியியலாளர்கள், குளிர்விப்பதற்காகவும், வெந்நீர் சப்ளை செய்வதற்காகவும், வெப்பமூட்டுவதற்காகவும், உலரவைப்பதற்காகவும், சூரிய வெப்பத்தைப் பயன்படுத்தும் அமைப்புக்களை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகிறார்கள்.

இவ்வகையில் உருவாகியிருப்பதுதான் சூரிய வெப்பத்தைப் பயன்டடுத்தும் ரெஃப்ரிஜிரேட்டர் ஆகும். புறத் தோற்றத்தில் மின்சாரத்தில் இயங்கும் சாதாரண ரெஃப்ர்ஜிரேட்டர் போலவே இதுவும் இருக்கிறது. ஆனால் இந்தப் புதிய ரெஃப்ரிஜிரட்டரில் கொம்ப்ரெஸ்ஸர் இல்லை. அதற்குப் பதிலாக, ஒரு சூரியசக்தி ஜெனரேட்டர் சாதனம் இருக்கிறது. ஹீலியோ பிரிட்ஜ் என்று அழைக்கப்படும் இந்த ரெஃப்ரிஜிரேட்டரை சூரிய ஒளிபடும் எலலா இடங்களிலும் இயக்க முடியும். குளிர்ச்சியை உற்பத்தி செய்வதற்கு இதில ஆகும் செலவு மற்ற சாதாரண குளிர்ப்பதனப் பெட்டிகளிலும் ஆகும் செலவைவிட மிகவும் குறைவாகும்.

குளிர்ச்சியை அல்லது வெப்பத்தை உண்டு பண்ணுவதற்காக சூரிய சக்தியை அனல் மின்சக்தியாக மாற்றுவதற்கு உதவும் கையடக்கமான வெப்ப டிரான்ஸ்போர்மர்களையும் இந்த நிலையத்தைச் சேர்ந்த விஞ்ஞானிகள் வடிவமைத்துள்ளனர். பண்ணைப் பொருள் கிடங்குகள், மருந்துக் கிடங்குகள் முதலியவற்றில் காற்றைக் குளிரவைப்பதற்கு இந்த சாதனம் பயன்படுகிறது. □

## சிந்தனை மேடை — 3

"சாதி அமைப்புத் தகர்ந்து வருகிறதா?" என்பதே, சிந்தனை மேடை—3 இல் ஆராயப்பட வேண்டிய விடயமாகும்.

சாதிப் பாகுபாடுகள் அருகி வருகின்றதெனின் எவ்வாறு? — அதன் பின்னணிகள் என்ன? பாகுபாடுகளை அறவே ஒழிப்பதற்குரிய வழி வகைகள் என்ன?

அப்படி இல்லை; சாதிப்பாகுபாடுகள் தீவிரத்துடன்தான் உள்ளன — புதிய வடிவங்களில் தலை நீட்டுகின்றன — என்றால், அவை பற்றிய பகுப்பாய்வுகள், பாகுபாடுகளை அரசியல், சமூக. பொருளாதார நடவடிக்கைகள் மூலம் அழிப்பதற்கான சிந்தனைகள்.

இவற்றை உள்ளடக்கிய — ஆய்வு நோக்கிலமைந்த — கட்டுரைகளை வாசகரிடம் எதிர்பார்க்கிறோம்; தகுதியானவை 'திசை' யில் வெளியிடப்படும்.

கட்டுரைகள் தனி அரைத்தாளில் மூன்று பக்கங்களுக்கு மேற்படாமல், தெளிவான கையெழுத்தில் எழுதப்பட வேண்டும்.

— ஆர்.

# புலப்பெயர்வு

## பலவாறான தோல்வியேயாகும்

**சிந்தனை மேடை — 2**

**புலம்பெயரும் ஈழத் தமிழர்**

**ச. இராமச்சந்திரன்**

**10**

“யாதுமூரே யாவரும்கேளிர்” என்னும்கணியன் பூங்குன்றனாரது, தீர்க்கதரிசனம் இன்று எம்மவரது புலம்பெயர்விற்கு கட்டியம் கூறுவதாக உள்ளது. நூறு வருடங்களிற் குட்பட, எமது இனத்தவர் மலேசிய நாட்டிற்கு பொருளீட்டச் சென்றது,முன்பு புலம் பெயர்வு இருந்துள்ளதை எடுத்துக் காட்டுகின்றது. பின்பு புத்திஜீவிகள் எனப்படுவோர் மேற்படிப்பிற்காகவும்,அதனுல் பொருளீட்டவும் புலம்பெயர்ந்தனர். இவை குறிப்பிட்ட தகுதி, வசதி உடையவர்களுக்குத்தான் முடிந்தது. ஆனல் இன்று தேசிய இனப்பிரச்சினை, ஆயுதரீதியில் வடிவெடுத்த பின்பு நடைபெறும் புலம் பெயர்வுதான் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. இப் புலம்பெயர்வில் சிறு வயதினர், இளைஞர்கள்,யுவதிகள், வயோதிபர் அடங்குகின்றனர். எண்ணிக்கை அடிப்படையில் முதலாவதாக இளைஞர்களும்,அடுத்ததாக யுவதிகளும் அடங்குகின்றனர்.இப்படியாக பலதரப்பட்டவர்களது புலம்பெயர்விற்கு முக்கிய காரணங்கள், தமது குடும்பங்கள் பொருளாதாரத்தில் மேம்பட வேண்டுமென்பதும் இனப்பிரச்சினையால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அடக்குமுறைகள், வன்முறைகளால் ஏற்படும் இழப்புகளுமாகும்.

### பொருளாதார முன்னேற்றம் இல்லை

புலம் பெயர்பவர்கள் தாம் செல்லும் நாடுகளில் பல வழிகளில் உழைக்கின்றனர். அவ்வுழைப்பில் குறிப்பிட்ட தொகை எம் நாட்டிற்கு பணமாக வருகின்றது. அப் பணத்தால் அரசாங்கத்திற்கு அந்நியச் செலாவணியும், குடும்பங்களிற்கு தன்னிறைவும் ஏற்படுகின்றது. ஆனல் வடக்கு,கிழக்குப் பிரதேசங்களின் பொருளாதாரத்தில் எதுவித முன்னேற்றமில்லை; இனிமேலும் மேம்படப் போவதில்லை. நமது இளைஞர்கள்,யுவதிகளின் புலம்பெயர்வு, அரசிற்குப் பல வழிகளில் நன்மையைத் தேடிக் கொடுத்துள்ளது. எமது பிரதேசத்தில் சிறுகைத்தொழில்களும், விவசாயமும் பாதிக்கப்பட்டுள்ளன. அரசு வெளிநாட்டிலிருந்து சகலவற்றையும் இறக்குமதி செய்து கூடியவிலைக்கு விற்பனை செய்வதால்,நமது பணம் மீண்டும் அரசிற்கே கூடுதலாகச் செல்கிறது. வெளிநாட்டு உற்பத்திகளைத் தொடர்ந்து பாவனைக்கு உட்படுத்துகின்றது. வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தால் எம்மவர் தொழிற்சாலைகள், சிறுகைத் தொழில்களை மேற்கொண்டு, பலருக்கு வேலை வாய்ப்பளித்து, பொருளாதாரத்தில் தன்னிறைவு காண அரசும் இனப்பிரச்சினையும் இடைஞ்சலாய் உள்ளன. வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தை இங்கு வட்டிக்கு கொடுப்பதுதான்,நமது இனத்தவரது கேடுகெட்ட பொருளாதார முன்னேற்றமாகும். இவர்களால் தான் பலவித மான சுகபோகங்களை அநுபவிக்க முடிகிறது.

### அரசியல் ரீதியாகப் பாதிப்பு

அரசியல் ரீதியாக நமது தேசிய இனவிடுதலைப்போராட்டத்தை புலப் பெயர்வு பலவீனப்படுத்தியிள்ளது. 83இற்குப் பிற்பட்ட ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் இளைஞர்களேயாகும். எமது போராட்டத்தின் உத்திகளையும்,பலத்தையும் அறிந்த இனவாத அரசு இளைஞர்களின் மனப்பாங்கினை மாற்ற, மேற்குலக,ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டு, அரசியல் தஞ்சம் கோரி அகதி வாழ்விற்கு வழி வகுத்தது. எமது குழுக்களிடையே உட்பூசல்களையும் வளர்த்து,தப்பியோடுவதற்கும் வழிவகுத்தது.இந்த வாய்ப்பை பல இளைஞர்கள் பயன்படுத்திஞர்கள்.எமது இனத்தவரது பிறவிக்குணங்களான பேராசை, தற்பெருமை, குறைத்து மதிப்பீடு செய்தல், கூட்டுஉளவியல் மனப்பான்மை இல்லாமைபோன்றவை,இனப் பிரச்சினை பற்றி நல்நோக்கு இல்லாமைக்கு வழிவகுத்து அகதியாக ஓடச் செய்தது. பொருளாதார ரீதியில் மேம்பாடு உள்ளவர்கள் புலம் பெயர்ந்தனர். இப்படியே இன்று வரை தொடர்வதால் அரசியல் ரீதியான ஆயுதப் போராட்டம் பின்னடைவு பெற்றுள்ளது. இன்று நமது இனத்தவர் வெளிநாடுகளிலிருந்து பிரச்சாரமும்,அத்துடன் பணவுதவியும் செய்வதாகக் கூறுகின்றனர். ஆனல் நமது இனத்தவர்களது, புலம் பெயர்வு இல்லாதிருந்தால் போராட்டவடிவம் புதுமெருகு பெற்று, அரசியல் ரீதியாக நமக்குப் பலமளித்திருக்கும்.

### மூளைசாலிகளா, படிப்பாளிகளா ?

மூளைசாலிகள் வெளியேற்றம் என்பதைவிட, உயர்படிப்புப் படித்தவர்கள் வெளியேற்றம் என்பது பொருத்தமானவார்த்தையாகும். எமது வரிப்பணத்தில் படித்து விட்டு இன்று அந்நிய நாடுகளில் சேவை செய்பவர்கள் மூளைசாலிகள் அல்ல. தமது உயர் படிப்பும், அதனுல் ஏற்படும் பொருளாதார முன்னேற்றமும் இன்று எமது சூழ்நிலையில் உதவுகின்றதா? எத்தனையோ, நேர்மையும்,பண்பும் கொண்ட உயர் கல்வி பெற்ற, மகான்கள் வைத்தியர்களாக, உபவேந்தர்களாக,பொறியியலாளர்களாக இன்றைய இக் கட்டான,பதட்டமான வேளையில், எம் மக்களிற்குச் சேவை செய்வதை புலம்பெயர்ந்த புத்திஜீவிகள் (? !) உணர்வார்களா ! எமக்கு வைத்தியத் துறையிலேதான் பெரும் இழப்பு. கூடுதலாக வைத்தியர்களும்,அடுத்து பட்டதாரி ஆசிரியர்களும் புலம் பெயர்ந்துள்ளனர். இவர்களது புலம் பெயர்வு எமது வைத்தியசாலைகளையும், பாடசாலைகளையும் எவ்வாறு பாதித்துள்ளதென்பதை, நேரில் சென்று பார்ப்பவரால் தான் உணர்வு பூர்வமாக அறியமுடியும். படிப்பு வேறு, அறிவு வேறு. புலம் பெயர்ந்தவர்கள் படித்தவர்கள். இங்குள்ளவர்கள் அறிவாளிகள் என்னும் மூளைசாலிகளாகும்.

### மூளை விசாலிக்க வாய்ப்பில்லை

எதுவிதத்திலும் எமது இளம் சந்ததியினர்க்கு வெளிநாட்டில் மூளை விசாரிப்படைய வாய்ப்பில்லை. அங்கு தொழில்துறைக் கல்வியையும்,உயர் கல்வி,விளையாட்டு போன்றவற்றில் ஈடுபடுபவர்கள் மிகச் சிறிய தொகையினராகும். கூடுதலானோர் தொழிற்சாலைகளில் சிறு வேலைகளையும், உணவு விடுதிகளிலும், ஹொட்டேல்களிலும் வேலை செய்வதால் மூளைவிசாலிப்படைய இடமில்லை. உளவியல் அறிவு வளர்ச்சியிருந்தால், மேற்கொண்டு நிதானமாக எதையும் சாதிக்க முடியும். அவ்வறிவை எமது இனத்தவர் எவ்வாறு அறிய முடியும்?எமது இனத்தவரது முதல் நோக்கம் பணமாகஇருப்பதால் போதை வஸ்துக் கடத்துவதிலும், கடவுச் சீட்டில் ஆள் மாறாட்டம் செய்வதிலுமே மூளை விசாலிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேற்கூறியவற்றை பல வெளி நாட்டுப் பத்திரிகைகள் எடுத்துக் கூறுகின்றன. ஒருவரது மூளைவிசாலிப்பிற்குசூழ்நிலையே முக்கிய காரணமாகும். நமது இனத்தவர் அந்நியச் சூழலில் அடிமையாகவும், நெருக்கடியற்ற பொருளாதார வசதியுடனும் வாழ்வதால் மூளைவிசாலிப்பிற்கு இடமில்லை. குறிப்பிட்ட சிலர் தொழில் நுட்பம், கலை, இலக்கியம், விளையாட்டு போன்றவற்றில் ஈடுபட்டு, வெற்றியீட்டுகின்றனர். நமது நாட்டின் இன்றைய சூழல், கூடுதலாக மூளைவிசாலிப்பை ஏற்படுத்துகின்றதென்பதற்கு, நடைமுறைச் சம்பவங்கள் உதாரணங்களாகவுள்ளன.

கலாசாரம் என்பது எம் இனத்தவர்க்கு ஓர்கண்துடைப்பாகும்.நமது நாட்டில்,பெரும் பான்மையினத்தவருடன் ஒப்பிடும் போது, நாம் கலாசாரம் என்பதில் பின்தங்கியுள்ளோம். இந்திய தமிழ்-இந்தி சினிமாவையும், தமிழ்ச் சஞ்சிகைகளையும் பார்த்தும், படிப்பவர்களுமாகிய, எமது இனத்தவர் வெளிநாடுகளிலும், இவற்றையே கூடுதலாக அறியும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இங்கும், எங்கும் எம் இனத்தவர் உள்ளனரோ அவ்விடமும் சிறு தொகையினர் இலைமறைகாயாக எமது கலாசாரத்தையும் பின்பற்றி, பேணிப் பாதுகாத்து வாழ்கின்றனர். எமது இனத்தவர் அந்நிய கலாசாரத்தையும்,எமது கலாசாரத்தையும் அக உணர்வுடன் ஏற்றுக்கொள்கின்றனரா என்பது விடை தெரியாத வினுவாகும். ஏனெனில் நமது இளைஞர்கள், யுவதிகளில் நல்லவை, தீயவை என எவற்றையும் பகுத்தறியும் உளப்பக்குவத்தை அடையாதவர்களே கூடுதலாக உள்ளனர். திரு. புனிதன் கூறியுள்ள பரத நாட்டியமும்,சமயச் சடங்கும், கோவில்களும், முன்பு இந்தியாவில் இருந்து சென்றவர்களால் பரப்பபப்பட்டுள்ளது. சமயச் சடங்கும், பரத நாட்டியமும் எமது கலாசாரத்தை வளர்ப்பதாகவோ, பிரதிபலிப்பதாகவோ இருக்க முடியாது.எமது நாட்டவரது திருமணம்,பிறந்த நாள் போன்றவற்றை வீடியோவில் பார்க்குமிடத்து. எமது நாட்டுக் கலாசாரத்தின் பிரதிபலிப்பை விட, அந்நிய கலாசாரத்தின் பிரதிபலிப்புகளே மேலோங்குகின்றது.

### மொழித் தடை

அறிவியல் ரீதியில் மிகவும் மந்தநிலை. நமது அறிவு வளர்ச்சிக்கு, முக்கியமாக உறுதுணையாக இருப்பவை நல்ல நூல்களாகும். அத்துடன் தாய் மொழி அல்லது ஆங்கில மொழியில் படிக்கும் வாய்ப்பு இருக்க வேண்டும். நமது புலம் பெயர்ந்தவர்களில், பல நாடுகளில்,அந்நாடுகளிற்குரிய தேசிய மொழிகளை பேச்சு வழக்கில் அறிந்துள்ளவர்கள் அதிகம். படித்தறியவர்கள் மிகக் குறைவு.இவர்களிற்கு அந்தந்த நாட்டு மொழிகளிலுள்ள நல்ல நூல்களை அறிந்து, எடுத்துப் படிக்கும் வாய்ப்பு ஏற்படாது. எமது இனத்தவர்களது அந்நிய நாட்டு நட்புகள் அறிவுள்ளவர்களுடனுக இருப்பின் அறிவு வளர்ச்சிக்கு வாய்ப்புண்டு.ஆங்கிலநாடுகளில் வாழ்பவர்களில், ஆங்கிலத்தை முழுமையாகக் கற்றறிந்தவர்களால் தான், நல்ல தரமான அறிவை, நல்ல நூல்கள் மூலம் பெற வாய்ப்புள்ளது.

### நலியும் உடல் நலம்

புலம்பெயர்ந்தவர்களில் கூடுதலானோர் முதுமையை எட்டும் போது மிகவும் ஆரோக்கியம் குன்றியவர்களாகவே காணப்படுவர். தற்சமயம், வீட்டிலிருந்து பணம் வேண்டுமென, எதிர் நோக்கும் கடிதங்கள் அவர்களை கடின உழைப்பிற்கு உள்ளாக்குகின்றது. அத்துடன் அந்நாடுகளின் காலநிலை, நாட்டுப் பிரச்சினையால் கேட்கும் செய்திகள் போன்றவை, மன நிம்மதி என்ற காரணத்திற்காக சிகரட் புகைத்து, மது வருந்தி, ஒருபடி மேலாக போதைவஸ்து பழக்கத்திற்கும் அடிமையாக்குகின்றது.மனதை நிம்மதிப்படுத்தும் இக் காரணிகளிற்கு நாளாவண்ணம் அடிமைப்படுவது பாலியல் துர்நடத்தைக்கும் வழிகோலுகின்றது. இத் துர்நடத்தை பலவித தொற்று நோய்களிற்கு உள்ளாக்கும்.இப்படியேநாளாவண்ணம் மனநிம்மதி வேண்டி, ஆரோக்கியமற்ற ஓர் உடல் நிலையைப் பெறுகின்றனர்.

### எதிர்கால அடக்குமுறை

புலம் பெயர்ந்த நம் இனத்தவர் அந்நிய நாடுகளில் பல மனக்கஷ்டங்களுடனேயே வாழுகின்றனர். அந்நிய நாட்டவரால் மேற்கொள்ளப்படும் இன, நிற வேற்றுமை, எமது இனத்தவரது குறுகிய மனோபாவம், தற்பெருமை, கூட்டு உளவியல் மனப்பான்மை இல்லாமை, சிலரது இழிசெயல்கள், பிற நாடுகளில் மிகவும் கேவலமாக எண்ணவும், நடத்தவும் வைக்கின்றது. அங்கு வாழும் எம் பெரும்பாலான இளைஞர்கள், யுவதிகள் அங்கு திருமணத்தை மேற்கொண்டு, குழந்தைகளையும் பெற்று பெற்றோர்களாகின்றனர். எமது இனத்தவர்கள் புலம் பெயர்ந்த கூடுதலான நாடுகள் நவீன விஞ்ஞான வளர்ச்சியால், இராணுவ ரீதியிலும் நவீனமயமானவை.அவ் நவீன விஞ்ஞான, இராணுவ வளர்ச்சி அரசியல் மாற்றங்களை ஏற்படுத்தும் வேளை எமது இனத்தவரே பல பிரச்சினைகளை, எதிர்நோக்குவர். யூத இனத்தவர் முன்பு அடக்குமுறைக்கு உள்ளாக்கப் பட்டது போல், நாமும் அப் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டும். அரசியல், பொருளாதார மாற்றங்கள் நடை பெறும் போது, அந்நாட்டவர்களால் எமது இனத்தவர் புறக்கணிக்கப்பட்டு, பலவிதமான இன்னல்களை எதிர் நோக்க வேண்டிவரும். ஆகவே வடக்கு, கிழக்கில் இருக்கும் பிரச்சினையால் ஏற்படும் எமது இனத்தவரது புலம்பெயர்வு பலவிதமான தோல்வியேயாகும்.!

# பறவைகள் ஏன் ஒன்றாகப் பறக்கின்றன?

பறவைக்கூட்டமானது ஏன் ஒன்றாகப் பறக்கின்றன என்பதும் எவ்வாறு ஓரே நேரத்தில் பறவைகள் யாவும் தங்கள் பிரயாணத் திசையை மாற்றுகின்றன என்பதும் ஆய்விற்குஉள்ளாக்கப்பட்டுள்ளன. மேலும், கூட்டத்திலுள்ள ஒவ்வொரு பறவையும் அறிகுறிகளை எவ்வாறு பெறுகின்றது என்பதும், அவற்றுக்கு எவ்வாறு பதில் அளிக்கின்றது என்பதும் பெரும் கேள்விக் குறியே !

பறவை ஆராய்ச்சியாளர்கள் இவை பற்றி அறிவதன் பொருட்டு, இலத்திரனியல் காந்தத்தைப் பயன்படுத்துகின்றனர். இக்காந்தத்தின் மூலம் பறவைகள் பற்றிய அறிகுறிகளை ஒளியின் வேகத்தில் பெறக்கூடியதாய் உள்ளது. காந்தவிசைக் கோடுகளின் மூலம் பறவைகள் திசை அறிந்து பறக்கின்றன என்ற அடிப்படையிலேயே, இலத்தி

(7ஆம் பக்கம் பார்க்க)

## கிறிஸ்மஸ் செய்தி கேளுங்கள்!

ஓர்
ஒளியின் உதயம்
உலகமெங்கும்!
விழிகள்
திறந்தனவா?
வியர்த்தந்தான்!

இருட்டையே
இறுகத்
தழுவிக் கொள்ளும்
மனித
இதயங்களுக்கு
வெளிச்சம் என்றால்
வெறுப்புத்தானே!

புல்
பூண்டுகளைப் போல்
வானத்தில்
புதுமைகள்
தோன்றினாலும்
ஊனக் கண்களுக்கு
ஒன்றுமே
தெரியாது
ஞானக்
கண்களுக்குத் தான்
நாலும் தெரியும்.

நல்லது
எது
நாட்டில்
நடந்தாலும்
நம்மவர்
சிலருக்குப்
பிடிக்கவே
பிடிக்காது.

ஏரோதன் போல்
கையில்
அதிகாரம்
இருந்தால்
அடுத்த
கணமே
அழிக்கத் துடிப்பர்
இல்லையென்றால்
ஏளனம்
செய்வார்.

குடிசைகளிலும்
தரித்திரக்
குடும்பங்களிலும்
குறிஞ்சி மலர்கள்
பூக்கவே
செய்யும்.

இவற்றைப்
பிடுங்கி எறிய
எந்த
ஏரோதனாலும்
முடியாது.

பாவத்தைப்
போக்க
பரமன்
அவதரித்தாலும்
ஆபத்தை
அங்கும்
அனுபவிக்கவே
வேண்டும்.

ஆண்டு தோறும்
யேசுவின்
அவதாரத்தை
ஆர்ப்பாட்டமாகக்
கொண்டாடுகிறோம் .....
அர்த்தம்
இருக்கிறதா?

இன்னும்
நாங்கள்
ஏரோதன்களாக
இருக்கும் போது!

— வாகரைவாணன் □




மௌனகுருவின் நெறியாள்கையில் ஓர் உண்மை மனிதனின் கதை எனும் மேடை நிகழ்வொன்று கைலாசபதி அரங்கில் 29-11-89 அன்று இடம் பெற்றது. இது யாழ்ப்பாணக் கல்லூரி நிறுவனர் டானியப் பூவரின் வாழ்க்கை வரலாற்றைக் கூறுவது. இம்மேடை நிகழ்வுக்கு 'விவரண அரங்கு' என நெறியாளர் பெயர் சூட்டுகிறார்.

விவரண அரங்கும் அல்ல. நவீன நாடக உத்திகள், மௌனகுரு போன்றவர்களிடம் எம் பொறுமையைச் சோதிக்கும் அளவுக்குக் கீழிறங்குவது நல்ல அறிகுறியல்ல.

விட்டோமே என்ற நிர்ப்பந்தத்தில் இது உருவாக்கப்பட்டது போலவே தொனித்தது.

மேலும் சில குறைபாடுகளைச் சொல்லலாம். மேடை

பிறக்குது'. போன்றவற்றில் இவ்வமைப்பு முறை எமக்கு புதிய அனுபவங்களைத் தந்தது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் தொடர்ந்து இந்தக் கலவை முறையைப் பார்க்க நேர்ந்ததில், இப்போது மெல்லிய சலிப்பே ஏற்படத் தொடங்கியுள்ளது என்பதை இவ்விடத்தில் கூறி வைக்கலாம்.

இது ஒரு பரிசோதனை

# ஓர் உண்மை மனிதனின் கதை

'ஒரு மேடைப் பேச்சினை, அரங்க வடிவமைப்புக்குள் கொண்டுவர முயற்சித்துள்ளோம்,' என்கிறார் நெறியாளர். ஒரு மேடைப் பேச்சினை எதற்காக அரங்க வடிவமைப்புக்குள் கொண்டுவர வேண்டும்? எடுத்துக் கொண்ட பொருள் பற்றி ஒருமேடைப்பேச்சு நுகர்வோனுக்குக் கொடுப்பதை விடவும், மேலதிகமாக ஒன்றை நுகர்வோனுக்கு கொடுக்க முயற்சிப்பதே காரணமாக இருக்க முடியும். அந்த மேலதிகம் என்பது, பேச்சின் சாராம்சத்தை நுகர்வோன் மனதில் அனுபவமாகத் தொற்ற வைத்தலாகவே இருக்க வேண்டும். அல்லாமல் வெறும் காட்சிப்படுத்தல்களின் மூலம் பேச்சின் பொருளை ஞாபகத்தில் இன்னும் சற்று அழுத்துவது எனக் கொண்டால், அதைச் சாதிப்பதற்கு கலைஞன் தேவையில்லை. ஒரு நீங்களோ நானோ போதுமானது.

மேடைப் பேச்சு வெறுமனே தகவல்களை எமக்குப் பரிமாறுவது; மேடை நிகழ்வோ தகவலின் பின்னால் உள்ள உணர்வு நிலை அருவத்தை மனதில் இறக்குவது. 'ஓர் உண்மை மனிதனின் கதை' இதைச் சாதிக்கவில்லை. இதை ஓர் அழுத்தமாக்கப்பட்ட மேடைப் பேச்சு என்று மட்டும் சொல்லலாம். இதை, முடியும் வரை பார்க்க நிறைய பொறுமை தேவைப்பட்டது. இது சிறுவர்களை நோக்கி உருவாக்கப்பட்ட

இவ்விவரண அரங்கில், இரு எடுத்துரைஞர்கள் டானியல் பூவரின் வாழ்க்கை வரலாற்றை மாறி மாறி எடுத்துக் கூறுகின்றனர். இடைக்கிடை முக்கியமான சம்பவங்கள் காட்சிப்படுத்திக் காட்டப்படுகின்றன. காட்சிகள், எடுத்துரைஞர்களுக்கு சற்றே ஓய்வு கொடுப்பதற்கு அமைக்கப்பட்டது போல துண்டு துண்டாக இடம் பெற்று, ஒரு முழுமைத்

□ இறைவன் □

தன்மையை இழந்து விடுவதால், ஒருவித செயற்கைத் தனமே மிஞ்சுகிறது. எல்லாக் காட்சிகளினூடும் ஊடுருவி நின்று இறுதியில் எம் உணர்வைப் பாதிக்கும் ஆதார அம்சம் இல்லாது போய்விடுகிறது. மேடையின் முன் மையத்தில் நின்றபடி எடுத்துரைஞர்கள் அதிக நேரத்தை எடுத்துக் கொள்வது, பார்க்க வந்த எம்மைக் கேட்க வைத்து அதிகம் பொறுமையைக் சோதிப்பதாகவே அமைந்தது. 'விவரண அரங்கு' எனும் பதம் எடுத்துரைஞர்களுக்கு மேடையில் முதன்மை கொடுக்க அனுமதிக்குமாயின், நெறியாளர் அதை முறையாகப் பயன்படுத்தத் தவறிவிட்டார் என்பதையே எமது பொறுமை இழந்த நிலை எடுத்துக் காட்டிறது. இன்னும் சொன்னால், மேடை நிகழ்வுக்குள் கொண்டு வந்து

யின் முன் இடத்தில் நடன உடை அணிந்த இருமாதர்கள் நின்றிருந்தார்கள். டானியல் பூவரின் வாழ்க்கைக்கும் அவர்களுக்கும் என்ன சம்பந்தம் என்பது புலனாகவில்லை. அவர்களும் கூட, அம்மேடை நிகழ்வுக்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை என்பது போல அனுவசியமாக அந்த இடத்தில் நின்றிருந்தார்கள். அல்லது நாடகம் பார்த்துக் கொண்டு நின்றார்கள். எந்த வகையிலும் பொருந்தி வராமல் துருத்திக் கொண்டு நின்ற இந்த அனுவசியம் ஏனென்று புரியவில்லை? நவீன நாடகங்களில் மேடையில் ஓரிடத்தில் ஒருவரை சும்மா நிற்க வைத்து, பல அர்த்தங்களுக்குக் குறியீடாக்குவதை நாம் அறிவோம். அவ்வனுபவத்தின் அடியாகக் கூட இந்த நடன மாதர்களுக்கு எந்தக் காரணத்தையும் எம்மால் கற்பிக்க முடியவில்லை.

பொதுவாக மௌனகுருவின் நாடகங்களென்றாலேயே ஏழெட்டுப் பேர் கொண்ட நீண்ட வரிசையாக மூன்று நாலு குழுக்கள் மேடையின் இடது, வலதுகளிலிருந்து தோன்றி ஏதாவதொரு மெட்டுக்கு (பெரும்பாலும் நாட்டுப் பாடல்) ஏற்ப அங்க அசைவுகள் காட்டி ஆடுவார்கள். இதில் ஒரு செய்நேர்த்தி இருக்கும். இவ்விவரண அரங்கு கூட இவ்வடிவத்திலேயே உருக் கொடுக்கப்பட்டிருந்தது. 'சக்தி

முயற்சியே. ஆம்! புதிய கருத்துக்களைக் கூற, புதிய வடிவங்களைத் தேடும் அல்லது உருவாக்கும் முயற்சி இது. — இது இவ்விவரண அரங்கு குறித்த மௌனகுருவின் கூற்று. இதிலென்ன புதிய கருத்து இருக்கிறது? டானியல் பூவரின் வாழ்க்கை வரலாறு புதிய கருத்தா? அல்லது ஒரு மனிதனின் வாழ்க்கை வரலாறு எனும் அம்சம் நாடகத்திற்கு புதிது என நெறியாளர் கருதுகிறாரா? புரியவில்லை. இதிலென்ன புதிய வடிவம் இருக்கிறது? பார்த்து, மெல்ல சலிப்பும் அரும்பத் தொடங்கிவிட்ட மௌனகுருவின் பழைய பாணிதானே, இதிலும் திரும்பத்தரப்படுகிறது பிறகு இதை எப்படி ஒரு பரிசோதனை முயற்சி என்று சொல்லுவது?

'வித்தியாசம் வித்தியாசமான அனுபவங்களைப் பார்வையாளர்கட்கு அளிப்பதுவும் நமது நோக்கங்களுள் ஒன்று' என்கிறார் நெறியாளர். 'ஓர் உண்மை மனிதனின் கதை' எமக்கு எந்த விதமான வித்தியாசமான அனுபவத்தையும் தந்ததாய் இல்லை. சற்றே நெகிழும் தன்மை வாய்ந்த நவீன நாடக உத்தி முறைகளை, அது செல்லும் திசையெல்லாம் விட்டு விடாமல், முற்றிலும் புதிய நிலைகளுக்கு எடுத்துச் செல்லுவதே வித்தியாசமான அனுபவங்களுக்கு எம்மை இட்டுச் செல்லும். □




## மூன்று கவிதை நூல்கள்

தமிழில்: கே. கணேஷ்

1. எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே
   — சாந்தோர் பெட்டோவ்ஃபி, விலை: இந். ரூபா 7/-
2. ஒரு சோவியத் கவிஞரின் புதுக்கவிதைகள்
   — வியச்சிஸ்லாவ் குப்ரியானோவ், விலை: ரூபா 10/-
3. பாரதி பக்தன் பார்பரா கவிதைகள்
   விலை: ரூபா 10/-

ஹங்கேரியக் கவிஞரான சாந்தோர் பட்டோஃபி, ரஷ்யக் கவிஞர்களான வியச்சிஸ்லாவ் குப்ரியானோவ், பாரதிபக்தன் பார்பரா ஆகியோரது கவிதைகள் மொழிபெயர்க்கப்பட்டு முறையே 'எத்தனைநாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே', 'ஒரு சோவியத் கவிஞரின் புதுக் கவிதைகள்', 'பாரதி பக்தன் பார்பராவின் கவிதைகள்' என்ற தலைப்பில் தொகுப்புக்களாக வெளியிடப்பட்டுள்ளன. இவற்றை மொழிபெயர்ப்புச் செய்து தந்திருப்பவர் கே. கணேஷ் ஆவார்.

கே. கணேஷ் அவர்கள் தமிழ் கூறும் நல்லுலகெங்கும் நன்கறியப் பெற்றவர். 'எத்தனை நாள் துயின்றிருப்பாய் என்னருமைத் தாய்நாடே' தொகுப்பை வெளியிட்டுத் தந்துள்ள 'தேசிய கலை இலக்கியப் பேரவை'யினர் கே. கணேஷ் பற்றிக் குறிப்பிடுகையில், "ஆக்க இலக்கிய கர்த்தாவாகவும் கவிஞராகவும் மட்டுமன்றி உயிரோட்டம் நிறைந்த மொழிபெயர்ப்புக்களையும் தந்த இவர், முற்போக்குத் தமிழ் இலக்கியத்துக்கு குறிப்பிடத்தக்களவு பங்களிப்புச் செய்துள்ளார்" என்று கூறுவது, இவரைப் பொறுத்தளவில் சாலவும் பொருத்தமானதே.

மேலும், அவர்கள் இந்நூல் பற்றிக் குறிப்பிடுகையில ... "காலத்தின் தேவையால் சிகரம் வைத்தாற்போல் திகழ்கிறது" என்றும் கூறியுள்ளது, ஹங்கேரியக் கவிஞனான சாந்தோர் பெட்டோவ்ஃபியின் கவிதைகளுக்கு மட்டுமல்ல, ரஷ்யக் கவிஞர்களான 'வியச்சிஸ்லாவ்' 'குப்ரியானோவ்', பாரதிபக்தன் 'பார்பரா' ஆகியோரது கவிதைகளுக்கும் கூடவே பொருந்தும் என்பது குறிப்பிடத்தக்கது.

கே கணேஷ் அவர்கள் ஒரு கவிஞராக மட்டுமல்லாது சிந்தனையாளராகவும், கூடவே முற்போக்குச் சிந்தனைகளை முன்னெடுத்துச் செல்லும் இயக்க ஈடுபாடு கொண்டவராகவும் இருப்பதால், இவரது மொழிபெயர்ப்புக்களும் காலத்தின் முற்போக்குத் தேவையின் வெளிப்பாடுகளாக அமைந்து விட்டதில் வியப்பில்லை.

### திசைமுகன்

ஹங்கேரியக் கவிஞன் சாந்தோர் பெட்டோவ்ஃபி பற்றிய அறிமுகவுரையில் அவன் எழுதியதாக மொழிபெயர்க்கப்பட்டுத் தரப்படும் இக்கவிதை, எவ்வளவு உயிர்த்துவம் உடையதாகவும் இன்றைய நமது நிலைக்குப் பொருத்தப்பாடுஉடையதாகவும் இருக்கிறது என்பதைப் பாருங்கள்:

"உயிரொரு பெருநிதி —
காதல்/ உயர்வுடையதனி

(7ஆம் பக்கம் பார்க்க)

இசையின் சிறுகதை

# உள்

மலையகத்தின் அந்தப் பாடசாலையில் நான் கடமையாற்றத் தொடங்கி ஒரு வருடம் பூர்த்தியாயிருந்தது. ஆரம்பத்தில் அந்தப் பிரதேசத்தின் கால நிலையும் என்னைப் போலவே வேறு இடங்களிலிருந்து நியமனம் பெற்றவர்கள் கூறிய 'பயமுறுத்தும்' கதைகளும் என்னைச் சங்கடப்பட வைத்த போதும், காலப் போக்கில் எல்லாம் பழகிப் போய் அந்த இடமே எனக்குப் பூலோக சொர்க்கமாய்ப் பட ஆரம்பித்தது. யாழ்ப்பாணத்துக்கு எழுதும் கடிதங்களில் மலையக மான்மியமே என்னையறியாமல் அதிகரிக்கத் தொடங்கியிருந்தது - நண்பர்களில் பலர் எப்போது தாங்களும் ஹட்டனுக்கு வரலாம் என்று கேட்டு எழுதுவதும், நான் அங்கு பெய்கிற மழையையும் குளிரையும் விபரித்து - சீசன் வரும் வரைக்கும் பொறுத்திருக்கும் படி கேட்டுக் கொள்வதும் இடையிடை நிகழ்ந்து கொண்டிருந்தது.

என்னையறியாமல் அந்தச் சூழலுடனும் பாடசாலையுடனும் ஒன்றிப் போயிருந்தேன்.

ந. சத்தியபாலன்

அன்று கூட நான் மேல்மாடி வகுப்பொன்றிலிருந்து அடுத்த பாடத்துக்காகக் கீழே இறங்கி வந்து - படிகள் முடிவடையும் இடத்துக்குச் சற்றுத் தள்ளி அமைந்திருக்கும் பூந்தோட்ட மலர்களின் அழகில் மனதைக் கொடுத்து நின்றிருந்தேன் - எப்போதுமே அந்தப் பயிர்களின் அழகை அளக்க இயலாமல் திணறுவதுண்டு. அந்தப் பசுமையும் - மலர்களின் ஒளிர்வும் ஈரப்போர்வையில் எல்லாமே சிலிர்த்துத் தெரிகிற எழிலும் யாரையும் சில கணங்கள் நிறுத்தி வைத்துத் தான் பின் நகர அனுமதிக்கும் — அவற்றின் அந்த நேர்த்தியான அழகுக்கு அவற்றை மிகுந்த கலை உணர்வோடு சீராக நாட்டிப் பேணிப்பாதுகாக்கிற தோட்டக்காரன் இருதயமும் ஒரு பிரதான காரணம் தான்.

இங்கு என் கவனத்தை ஈர்த்த விஷயங்களில் இந்த இருதயத்தின் 'ரசனையும் செய் நேர்த்தி' மிகுந்த அவனது தோட்ட அமைப்பும் - இந்த விஷயங்களுக்குச் சற்றும் சம்பந்தமில்லாத மாதிரியான அவனது தோற்றமும் இயல்புகளும் மிகப் பிரதானமானவை தான்.

"நீங்க யாழ்ப்பாணமுங்களா சேர்" என்ற கேள்வியுடன் எனக்கு அறிமுகமான புதிதில் தோட்டக்காரன் - பாடசாலை வெளிவேலைகளையும் கவனிக்கிற ஒருவன் என்று மட்டும்தான் தெரிந்து வைத்திருந்தேன் — நாளடைவில் பாடசாலையின் முன் புறத் தோட்டம், அதையடுத்து அமைந்திருக்கிற காய் கறித் தோட்டம், எல்லாவற்றையும் பார்வையிட்ட போது தான் இருதயத்தின் அக்கறையும் ரசனையும் மிகுந்த உழைப்பின் பெருமை புலனாயிற்று.

ஒருபழைய காக்கிக்கட்டைக் காற்சட்டை, கறுத்த உடம்பை மூடியும் மூடாமலும் கிடக்கிற மஞ்சள் நிற ஷேர்ட், எலும்புகள் துருத்திக் கொண்டு நிற்கிற முன்னெடுத்த பற்களுடன் கூடிய முகம் — இவற்றுடன் ஏறத்தாழப் பாடசாலையின் வேலைநேரம் முழுவதிலுமே தோட்டத்தில் பாடுபடுகிறவன் இருதயம்.

அப்போதும்கூட பூந்தோட்டத்தை அடுத்துத் தெரிகிற காய்கறித் தோட்டத்தில், அவன் ஏதோ வேலையாக இருந்தான். அருகில் சில மாணவர்கள் ஏதாவது விவசாயம் தொடர்பாக வேலை செய்கிறார்கள் போலும் என்ற எண்ணத்துடன் வகுப்புக்குச் செல்ல முனைந்த போது, சிறிது ஓங்கி ஒலித்த ஒரு மாணவனின் குரலும் - அவன் உச்சரித்த சில வார்த்தைகளும் என்னை அதிர்ச்சிக்குள்ளாக்கி அவ்விடத்திலேயே நிறுத்தி வைத்தன. அவன் யாரையோ காரசாரமாய் வைது கொண்டிருந்தான்.

நின்று சற்றுக் காதுகொடுத்துக் கேட்டதில் அந்த மாணவர்கள் இருதயத்தையே வைது கொண்டிருப்பது புரிந்தது. "என்னடா பண்ணிப் புடுவே கிழட்டுப்பயலே ...!" என மேலும் தொடர்ந்ததைக் கேட்கச் சகியாமல், காய்கறித் தோட்டத்தில் நான் நுழைந்தபோது, அவர்கள் யாவருமே விக்கித்துப்போய் நின்றார்கள். என்னைக் கண்டதும் ஒரு புன்னகையோடு தன் வேலையில் இருதயம் தொடர்ந்தும் முனைந்தான். ஏதும் அசம்பாவிதம் நடந்தமைக்கான அறிகுறிகள் எதையுமே இருதயத்தின் முகத்தில் காணவில்லை. அவனாக ஏதும் முறையிடுவான் என்ற எனது எதிர்பார்ப்பும் வீணாயிற்று.

"என்ன நடக்குது இங்க ... நீங்க எல்லாரும் வகுப்புக்குப் போங்க ......" எனக் கண்டிப்புடன் சொல்லியதில் மாணவர்கள் தலை குனிந்தபடி தமது வகுப்புக்குச் சென்றார்கள்.

நானும் அவர்களைத் தொடர்ந்தேன். அந்த மாணவர்களை விசாரித்தபோது வேண்டுமென்றேதான் இருதயத்தை வம்புக்கிழுத்து ஏசியிருக்கிறார்கள் என்பது புரிந்தது. "உங்களுக்கு வயசு எத்தனை? இருதயம் எத்தனை வயசுக்கு மூத்த மனுஷன்? —உங்க வயசில இருதயத்துக்குப் பேரப்பிள்ளைங்க இருக்கும், தெரியுமா? தோட்டக்காரன் எங்கிறதுக்காக எப்பிடியும் ஏசலாமெண்டு நினைச்சீங்களா? இனிமே ஏதாச்சும் இந்த மாதிரி நடந்தா அப்புறம் நடக்கிறதே வேற"

அனைவரும் தலைகுனிந்து நின்றனர்.

அந்தச் சம்பவத்துக்குப் பிறகு ஒரு நாள் இருதயத்தைக் கண்டபோது "இப்பெல்லாம் பையனுங்க ஏதும் வம்புக்கு வாறாங்களா இருதயம்?" என்றேன்.

"இல்லீங்க சேர்" என்று சொல்லிவிட்டுப் போனான். நானும் அவ்வப்போது அவதானித்ததில் அந்த மாணவர்கள் தேவையில்லாமல் தோட்டப்பக்கமே செல்வதில்லை என்று புரிந்தது.

பின்னர் ஒரு நாள் பாடசாலை முடிந்து நான் வீடு சென்று கொண்டிருந்தபோது என்னைத் தொடர்ந்து இருதயம் வந்துகொண்டிருப்பது தெரிந்தது. நான் நடையின் வேகத்தைத் தணித்தேன்.

"என்னங்க சேர் ...... பசி நேரமில்லீங்களா, அதனால வேகமாப் போறீங்களா...?" என்றபடி என்னோடு நடக்கலானான்.

"குளிர் கூடின இடங்களில சீக்கிரம் பசிக்கும் தானே இருதயம்" என்றபடி நானும் நடந்தேன்.

இப்படி அவனும் நானும் அடிக்கடி ஒன்றாகச் செல்வதுண்டு.

கடமையாற்றத் தொடங்கி ஒருசில மாதங்களின் பிறகு இதுபோலவே ஒருநாள் இருதயத்தோடு போய்க்கொண்டிருந்தபோது, இருதயத்தின் பேச்சை நானும், எனது பேச்சை இருதயமும் புரிந்து கொள்ளக் கொஞ்சம் சிரமப்பட்டோம் — "ரொம்ப வேகமாப் பேசிக்கிட்டுப் போறீங்க சேர். அதனால என்ன சொல்றீங்கன்னு புரிஞ்சுக்க முடியலீங்க" என்றேன். எனக்கு என்னவோ இருதயம்தான் வேகமாகப் பேசுவதாய்ப்பட்டது. பின்னர் நாளடைவில் என்னால் இருதயத்தைப் போலவே பேச முடிந்து, அதை அவன் அவதானித்துப்பாராட்டியும் இருக்கிறான். "நம்ப பகுதி மாதிரியே பேசுறீங்க இப்பெல்லாம்" என்று சந்தோஷமாகச் சொன்னான்! எனக்கும் சந்தோஷமாக இருந்தது.

நான் இந்த நினைவுகளோடு நடந்து கொண்டிருக்கையில் இருதயம் ஏதோ சொல்ல வருவதாகப்பட்டது.

"என்ன இருதயம் ஏதாவது சொல்லணுமா? என்ன யோசிக்கிறீங்க"

"இல்லீங்க சேர் — இந்தப் பையன்மாருங்களப் பத்தித் தானுங்க"

"ஏன் — அவுங்க திரும்பவும் ஏதாச்சும் பேசினாங்களா?—உங்ககிட்ட ஏதாச்சும் தப்பாப் பேசக்கூடாதுன்னு சொல்லி வச்சிருக்கேனே ......"

யாதையாப் பேசவே தெரியல்ல. அதனாலதான் அவங்களநான் ரொம்ப கண்டிச்சு வச்சிருககேன்"

"அதில்லீங்க சேர்... .. அந்தப் புள்ளைங்கள எனக்கு ரொம்பக்காலமாத் தெரியுமுங்க. இப்பிடித்தான் தமாஷாப் பேசுவாங்க. நமக்கெல்லாம் அதுபத்திக் கவலை இல்லீங்க சின்னஞ் சிறிசுங்க தானே சேர். அதுகளுக்கெல்லாம் என்னங்க தெரியும்? மதிப்பும் மருவாதியும், ரொம்ப அன்பான குழந்தைங்க அவங்கெல்லாம் ...... இப்ப யாருமே எங்கிட்டப் பேசுறதில்லையா, அதனால மனசுக்கு ரொம்ப வருத்தமுங்க சேர்..."



"அதில்லீங்க. இப்ப அவுங்க யாருமே என்கூடப் பேசுறதில்லீங்க — நிமிந்துகூடப் பாக்கிறதில்ல. நம்மக்கண்டா அங்கிட்டுத் திரும்பி உம்முனுகிட்டுப் போயிடறாங்க"

"அதுதானே நல்லது. அவங்களுக்கு பெரியவங்ககிட்ட மரி

இருதயம் பேசிக்கொண்டே போனான். எனக்குப் பேசுவதற்கு வார்த்தைகளே வரவில்லை. ☐

# குழப்பமான உலகுக்குக் காந்தியின் அகிம்சைவழி

இத்தத்துவத்தை முன்னெடுத்துச் செல்ல, ஒரு நிறுவனத்தைத் தோற்றுவிக்க வேண்டுகோள் ஒன்று விடுக்கிறார் பேரன்.

வளர்ந்து கொண்டிருக்கும் ஹிம்சையினால் துயருறும் உலகிலும், உடைந்துபோன மனித உறவுகளினாலும் இதற்கு மாற்றான பயன் விளையத்தக்க, இதனை உள்ளடக்கிய, எனது பேரனார் மோகனதாஸ் கரம்சந்த் காந்தியின் அகிம்சைத் தத்துவத்தைப் படித்து இதற்கு மாற்றான பயன் விளையத்தக்க, இதனை உள்ளடக்கிய, ஒரு நிறுவனத்தைத் தோற்றுவிக்கக் கருத்தில் கொண்டு, இந்த நெருக்கடியைச் சமாதானமாகத் தீர்க்க வேண்டும்.

அகிம்ஸையை அதன் உண்மையான நோக்கில் புரிந்து கொள்ளவேண்டும், ஹிம்சைக்கு வெற்றி கிடைக்காத இடத்தில், அரசியல் போர்க் கருவிகள் சேமித்துள்ள இடத்தில் பாவிக்கக் கூடிய ஓர் ஆயுதமன்று. அகிம்சை கருத்து வேற்றுமைகளைத் தீர்க்க, உலகம் இரண்டு வழிகளையே நம்புகின்றது — ஒன்றில் சண்டை பிடிப்பது அல்லது ஓட்டமெடுப்பது, ஒவ்வொருவருடைய மூளையையும் அடித்து உடைக்காமல் ஒரு சாதனையையும் செய்ய முடியாது என்று நம்புதல் நாகரிகத்தின் அடிப்படைக் கோட்பாடுகளை மறுப்பதாகும்.

அருண் காந்தி
தமிழில் : மூ. சி. சீனித்தம்பி

நான் பிறந்த தென்னாபிரிக்காவிலும் இந்தியாவிலும், அகிம்சைத் தத்துவம் பற்றிப் பரிசோதனை நடாத்த மகாத்மா காந்தி ஊக்குவிக்கப்பட்டார். ஐக்கிய அமெரிக்கக் கறுப்பர்களின் உரிமைகளை வென்றெடுக்க, அண்மைக் காலத்தில் டொக்ரர் மாட்டின் லூதர்கிங் இந்த ஆயுதத்தை முற்று முழுதாகப் பாவித்தார். சீனாவில் தியன் அன் மென் சதுக்கத்தில் மாணவர்களும் ஜனநாயகத்திற்கு முன்மாதிரி காட்டினர். ஹர்வாட் சர்வகலாசாலையின் அகிம்சை இசைவாக்கத் திட்டத்தின் பணிப்பாளர், ஜீன் ஸார்ப் உலகம் முழுவதிலும் கருத்து வேற்றுமைகளைத் தீர்க்க, 198 விதமான அகிம்சை வழிகளை இனங்கண்டுள்ளார்.

இதில் எந்த விதமான அக்கறையும் காட்டாது என்று நான் எதிர்பார்த்த நாட்டிலிருந்தே, வஞ்சப் புகழ்ச்சியாக எனது வேண்டுகோளுக்கு முதல் பதில் கிடைத்தது. மணிலால் - சுசிலா காந்தி நிறுவனத்தை எனது பெற்றோரின் நினைவாக ஸ்தாபிப்பதற்கு, ஏப்றிலில் ஆபிரிக்காவிலுள்ள டர்பனில் நேற்றால் சர்வகலாசாலை சம்மதித்தது. மகாத்மா காந்தி 1914ஆம் ஆண்டில் இந்தியாவுக்குச் சென்ற பிறகு 1947 இல் கிடைத்த சுதந்திரத்திற்காக, அப்போதே போராடத் தொடங்கினார். அவருடைய புறப்பாட்டுக்குப் பிறகும், எனது பெற்றோர் ஆபிரிக்காவில் தங்கிவிட்டனர். தென்னாபிரிக்காவில் வாழ்ந்த காந்திக் குடும்பத்தின் கடைசி அங்கத்தவராகிய எனது அன்னை நொவெம்பரில் இறந்த பிறகு, அந்த நாட்டில் எங்கள் குடும்பத்தினரின் வதிவிடத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது.

(7ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டிய மரத்தைப் பாதுகாக்குக

மரம் நடுகை வாரம் அனுஷ்டித்து ஒரு மாதத்திற்கு மேலாகிவிட்டது. தொலைக் காட்சிக் கமராக்களின் ஒளி வெள்ளத்தில் நாட்டப்பட்ட மரக்கன்றுகளில் எத்தனை இன்னும் உயிரோடு நிற்கின்றன என்பதை யாராவது மதிப்பிட்டுள்ளார்களா?

மரங்களை நட்டுவிட்டு மறந்து விடுவதால் பலனில்லை. மரக்கன்றுகளைத் தொடர்ந்து பாதுகாக்கவும் வேண்டும். மரம் நடுவோர் மட்டுமல்ல, இலங்கை மக்கள் அத்தனை பேரும் இந்த உண்மையை உணர்ந்து கொள்ள வைக்க வேண்டும்.

மரங்கள் எமது கலாசாரத்தோடு இணைந்தவை. இலங்கையின் பிரதான மதங்களான பௌத்தமும் சைவமும் மரங்களுக்குத் தனி இடம் வழங்குகின்றன. புத்தர் பிரான் வெள்ளரசு மரத்தின் கீழ் ஞானம் பெற்றார். இந்துமதக் கோவில்கள் ஒவ்வொன்றுக்கும் தல விருட்சங்கள் உள்ளன. வில்வம் இலைகளும் நெல்லி இலைகளும் பூசைக்குப் பயன்படுத்தப்படுகின்றன. தாமரையையும், மல்லிகை, முல்லை, மலர்ந்த ரோஜாப் பூக்களையும் பூசைக்கு வைக்கிறார்கள் பௌத்தர்களும் இந்துக்களும்.

இந்துமதக் கோவில்களுக்கு தோட்டம் ஓர் அங்கம். தோட்டமில்லாத கோவிலுக்கு அழகு இல்லை. கோவிலுக்கருகில் வளர்க்க வேண்டிய பூமரங்களை இந்துமதம் பட்டியலிட்டுக் கொடுத்துள்ளது. அதைப் போன்றே, கோவில் சுற்றுடலில் வளர்க்கத்தக்க மற்ற மரங்களின் பெயர்களையும் கொடுத்துள்ளது.

கோவில்கள் மட்டுமல்ல, மன்னர்களும் மாளிகைக்கு அருகில் பூங்காக்களை நிறுவியுள்ளனர். காடுகளைப் பாதுகாப்பதற்கும் அவர்கள் நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

எனவே, மரங்களை நாட்டுவதும் பாதுகாப்பதும் இலங்கை மக்களின் கலாசாரத்தின் ஓர் அம்சம். இந்தப் பாரம்பரியத்தை உபயோகிக்கத் தவறியதன் விளைவாகவே, நாட்டும் மரங்களில் பெரும்பாலானவை செத்துவிடுகின்றன.

மரக்கன்றுகளை நாட்டுவதல்ல முக்கியம். அவைகளைப் பாதுகாக்க வேண்டும்; பராமரிக்க வேண்டும். இந்த விடயத்தில் புத்த பிக்குவான வண. கிராந்திட்டியே பன்னசேகர தேரோவிடம் நாம் படிக்க வேண்டியவை நிறையவுள்ளன. களுத்துறையிலுள்ள கலஹிட்டிய கிராம மக்களின் உதவிடன், மரநடுகை இயக்கமொன்றை நடத்தி வருகின்றார் அந்தப் பிக்கு. மரக்கன்றுகளை உண்டாக்கும் பொறுப்பையும் நாட்டிய மரக்கன்றுகளுக்கு நீர் ஊற்றும் பணியையும் சிறுவர்களிடம் ஒப்படைத்துள்ளார் அவர். மற்றப் பணிகளில் பெரியவர்கள் ஈடுபடுகின்றனர். இதன் விளைவாக, வனுந்தரமாகக் காட்சியளித்த அந்தக் கிராமம் சோலையாக மாறி வருகின்றது.

மரங்களைப் பேணவேண்டிய முக்கியத்துவத்தையும் வலியுறுத்திக் கூறிவருகின்றார் அந்தப் பிக்கு. நாட்டிய மரங்களுக்குப் பசளை இட மறந்து விடுகின்றோம் நாம். பசளை என்றதும் விலைமிக்க இரசாயனப் பசளையைப் பற்றியே எண்ணிவிடுகின்றோம். 'கொம்போஸ்ட்' பசளை தான் மிகச் சிறந்தது.

கொம்போஸ்ட் பசளையை வீட்டிலேயே தயாரிக்கலாம். வீட்டில் கூட்டுகின்ற குப்பை கூளங்களை எரிக்க வேண்டாம். ஒரு கிடங்கை வெட்டி குப்பைகளை அதற்குள் கொட்டுங்கள். அதன்மீது மண்ணும்சாணமும் கலந்து ஒரு படையாகப் பரவுங்கள். மீண்டும் குப்பை, குழைகள், புல்லு வேண்டியவைகளைக் கொண்ட படை, இப்படியே படையாகப் போட்டு ஒழுங்காகத் தண்ணீர் விடுக. அடிக்கடி கிளறிவிடுதல் வேண்டும்; காற்றுப் புகத்தக்க வகையில்.

பன்னிரண்டாவது தினத்தில் முழுவதையும் மண்ணால் அல்லது பொலிதீனால் அல்லது கிடுகால் மூடிவைக்குக. எதுவித செலவுமின்றி 21ஆவது நாளில் உங்களுக்கு நல்லபசளை கிடைக்கும். அதை நீங்கள் வளர்க்கும் தாவரங்களுக்கு இடலாம் நீங்கள் பசளையிட விரும்பும் தாவரத்தைச் சுற்றியுள்ள மண்ணைக் கிளறி பசளையை அதனுடன் கலந்து விடவும்.

மரங்களை நாட்டும் போதும் சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். முதலில் 2 மீற்றர் ஆழமும் 1 மீற்றர் அகலமுமுள்ள குழிகளைத் தோண்டுங்கள். தோண்டும் போது மேற்பகுதியிலுள்ள மண்ணை எடுத்து அருகே வையுங்கள். அது பசளை மண். அடியில் இருக்கும் மண்ணுடன் கொம்போஸ்ட் பசளையை கலந்து குழியின் அடியில் இடுங்கள். மரக்கன்றை நாட்டிவிட்டு பக்கத்தில் பத்திரமாக எடுத்து வைத்த மண்ணைப் போட்டுக் குழியை நிரப்புக.

இன்னும் இரண்டு குறிப்புக்கள்: மழை காலத்தில் மரங்களை நடுக. மாலை நேரமே மரம் நட உகந்தது. நட்ட அரை மணி நேரத்தின் பின்பு நீரூற்றுக.

மரங்களை நடும் போது அந்தந்த சீதோஷ்ண நிலைக்கு உகந்த மரங்களையே தெரிவு செய்ய வேண்டும். வேப்பம் மரம் இலங்கையிலுள்ள எல்லாச் சீதோஷ்ண நிலைகளுக்கும் ஏற்றது.

நன்றி: இலங்கை சூழல் கொங்கிரஸ் வெளியீடு. □

# கொழும்பில்
## சமாதானத்தின் இராக்கினி சொரூபம்

இலங்கையில் கத்தோலிக்கக் கோயில்களில் அமைந்திருக்கும் சொரூபங்களை விடப் பெரிதான சமாதானத்தின் இராக்கினி (மாதா சிலை) சொரூபத்தை கொழும்பில் நிறுவியுள்ளனர். கொழும்பு உப - ஆயர் அதி வண. ஒஸ்வால்ட் கோமஸ், சொரூபத்தை டிசம்பர் 1-ஆம் திகதி திரை நீக்கம் செய்து வைத்தார்.

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவினால் வழங்கப்பட்ட நிலத்தில் இச் சொரூபம் அமைந்துள்ளது. அவ்விடத்தில்-சொரூபத்துக்கு முன்பாக சமாதானத்தின் இராக்கினி கோயிலும் நிர்மாணிக்கப்படவுள்ளது.

பதினன்கு அடி உயரமுள்ள இச் சொரூபம் 2½ தொன் எடை கொண்டது. சிங்கள சிற்ப - சித்திரக் கலைப் பாணியில் இச்சிலை வடிக்கப்பட்டிருப்பதால், இச் சொரூபத்தின் அமைப்பில் சிங்களக் கலாம்சத்தைக் காணக் கூடியதாக இருக்கிறது. இச் சொரூபத்தை வடிப்பதற்கு வண. பேட்ரம் டபேராவும், பெருமாள் நல்லநாதனும் ஆறு மாதங்கள் அயராது உழைத்துள்ளனர்.

இச் சொரூபத்தில் அதிசயமென்னவென்றால், உலகம் பூராகவும் உள்ள மாதா சிலைகளில் பால இயேசுவின் தலை சொரூபத்தின் இடப் பக்கம் இருக்கும். ஆனால், இச் சொரூபத்தில் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

# கொழும்பில் தமிழ் மாணவிகளுடன் சேட்டை

வெள்ளவத்தைப் பகுதியில் இளம் பெண்களுடன் குறிப்பாக தமிழ் மாணவிகளுடன் அங்கசேட்டை விடும் 'இளைஞர்' களின் தொல்லை அதிகரித்து வருகிறது.

வடக்கிலிருந்து 'விமானம்' மூலம் வந்தவர்களே பெரும்பாலும் இந்தப் 'பணியில்' ஈடுபட்டு வருகின்றனர்!

அண்மைக்காலமாக நிகழும் இந்தச் செயல்களால் சில பெற்றோர் சகோகாரரும் ரியூசன் முடிந்து பிள்ளைகளை வீட்டுக்கு கூட்டிச் செல்ல வேண்டியுள்ளது.

சில நாட்களுக்குமுன் இவர்களை எச்சரிக்கச் சென்ற 'சகோதரர்' ஒருவர் 'தாம் யார் என்று உமக்குத் தெரியுமோ' என்று எச்சரிக்கப்பட்டாராம்.

## மூன்று...

(3ஆம் பக்கத் தொடர்ச்சி)

னும் ஆம்/ சுயபெரும் விடுதலை — காண/ துறப்பன் அவற்றினை நான்.''

உயிரையும் காதலையும்விட விடுதலை பெரியது என அவன் கூறுவது, நமக்கு மிகவும் பொருத்தமானதே. மேலும், ''நீ மனிதனுயிரு'' என்ற தலைப்பில் வரும் கவிதையைப் பாருங்கள் :

''நீ — மனிதனுயிரு / மனிதனுயிரு/ ஆட்டுவிப்பார் தம்வழியில் / ஆடுகின்ற பொம்மையென / நாட்டு மக்கள் உனைக் கண்டு/ நகைத்திட நீ வாழ்வாயோ? '' என்று கூறும் போதும்,

''வல்லரக்கர் சினங்கொண்டு / வால்மடக்கும் நாயெனவே / புல்லர்களுக் கஞ்சுகிதோ?/ புரிபோர் நீ! நிமிர் தலையை!''

என்று மேலும் அழுத்தங் கொடுக்கும். மேலும் இக்கவிதைகள் மிகுந்த சக்திமிக்கவையாக வந்து விழுகின்றன.

'தேசியப்பாடல்' என்ற தலைப்பில் அவன் பாடுவது மிக நேர்த்தியாக மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

''மலரும் காலம் வந்தது காண்/ மக்யார் நாடே எழுந்திடுக/ புலரும் விடுதலை வேண்டுவையோ/ பூணும் விலங்கினை ஏற்பதுவோ? ''

1823 இல் பிறந்து 1849 இல் தனது 26 வயதில் இறந்து போன இக்கவிஞன், தன் நாட்டின் சுதந்திரத்துக்காகவே உயிரைத் தியாகம் செய்த மகாகவியாகவும் வீரனாகவும் திகழ்கிறான்.

சோவியத் கவிஞரான வியசிஸ்லாவ் குப்ரியானேவ் அதிகம் அலட்டிக் கொள்ளாமலே இன்று நமக்குத் தேவையான ஆழமான விஷயங்களைச் சொல்கிறார்.

'இசைப்பாடம்' என்ற தலைப்பில் அவர் எழுதியுள்ள கவிதையைப் பாருங்கள்.

''மனிதன் சிறகுகளை ஆக்குவதற்கு முன்னர்/ கூண்டினை ஆக்கினான்/ கூண்டுகளில் சிறகு படைத்தவை/ பறக்கின்ற விடுதலை குறித்துப் பாட்டிசைக்கும்/ கூண்டுக்கு முன்னால் சிறகற்றவர்கள்/ கூண்டுகளின் தேவை குறித்துப் பாடுவார்கள்''

இக்கவிதையும் இன்றைய நமது நிலையின் சிறந்த படப்பிடிப்பே. 'வேண்டுகோள்' என்ற கவிதையில், ''மஞ்சள் கறுப்பு வெள்ளை/ நம்மின் அனைவர் குருதியெல்லாம் ஒரே வகைச் சிகப்பு/ நிறுத்துக ஆய்வுகளை'' என வரும் வரிகளும் மிகவும் சக்தி வாய்ந்த இன்றையத் தேவைக்குரிய சித்திரிப்பே.

பாரதி பக்தன் பார்பராவின் கவிதைகளும் நமக்கு இதம் ஊட்டுபவையாகவும் பொருத்தம் உடையனவாகவுமே உள்ளன. 'ஆக்ரா நகர்' பற்றி வரும் கவிதையில்,

''இவ்வுலகில் தீமைகளும் எவ்வளவோ/ உண்டிங்கே/ இரவதனில் துயில்வாரா/ இவற்றை எண்ணிடிலோ''

என்று கூறிச் செல்லும் பகுதியும், அதன் முடிவான ''அடுத்துவரும் புத்தாண்டு அற்புதங்கள் கொணர்வாயே'' என்பவையும், எம்மினத்தின் இன்றைய குரலாகவே ஒலிக்கிறது.

இக்கவிதைகளை கவிஞர் கணேஷ் நன்றாகவே மொழி பெயர்த்துள்ளார். ஆயினும் மரபுக் கவிதை இறுக்கத்தை இன்னும் சற்றுத் தளர்த்தியிருந்தால், இவற்றின் தாக்கம் பன்மடங்கு அதிகரித்திருக்கும் என்றே எண்ணத் தோன்றுகிறது. □

## குழப்பமான...

(6ஆம் பக்கத் தொடர்ச்சி)

எங்கள் குடும்பத்திடமிருந்த மகாத்மா காந்தியின் ஆவணங்களை இலண்டனிலுள்ள 'கிறிஸ்தி'யில் ஜூன் மாதத்தில் ஏல விற்பனை செய்ததன் மூலம், இந்த நிறுவனத்திற்கு 12,000 அமெரிக்க டொலர் கிடைத்தன.

சமாதானம் என்ற பெயரைச் சொல்லி தேசங்கள் இலட்சக்கணக்கான கோடி டொலர்களை அழிவு வேலைகளுக்காக விரயஞ் செய்தும், தேவையான யந்திர சாதனங்களைச் சிருஷ்டித்தும், மனித சக்தியை நிலை நாட்டியுமுள்ளன. 20ஆம் நூற்றுண்டே வரலாற்றில் மிகமோசமான ஹிம்சைக்குள்ளான நூற்றாண்டாகக் கருதப்படக்கூடியதாகவுள்ளது. ஒரு யுத்த யந்திரத்தைச் சிருஷ்டி செய்ய செலவு செய்யப்பட்ட பணத்தை ஒப்பீட்டு ரீதியாகப் பார்க்கும் போது உண்மையாக சமாதானயந்திர சாதனத்தைச் சிருஷ்டிக்க ஒன்றுமே செலவு செய்யப்படவில்லை என்று தான், கூறவேண்டும். தற்போதைய இனிப் பிறக்கப் போகின்ற சந்ததியினரின் மனங்களை இம்முறையான ஹிம்சை மனப் பிராந்தியின் விளைவுகள், மனதைச் சிதறடிக்கின்றது. மூன்றாவது வழியாக நெருக்கடிகளைத் தீர்க்க - அறவழியை ஏற்பதற்கு ஊக்கமளிக்க, தகவல் கொடுக்க, தூண்டுதல் முயற்சிகளை அவசரமாகவே மேற்கொள்ள வேண்டும். □

## பறவைகள்...

(4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரணியல் காந்தம் ஆய்விற்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

நாடு விட்டு நாடு செல்லும் பறவையினங்கள் தாம் ஒன்றாகப் பிரயாணங்களை மேற்கொள்வதன் மூலம், எதிரிகளிடமிருந்து தப்பிக்கொள்ளவும் திசை பிசகாமல் பயணத்தை ஒன்றாக மேற்கொள்ளவும் செய்கின்றன.

பறவைகள் கூட்டமாக வாழ்வதன் மூலம் பல விஷயங்களை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். உணவுப்பங்கீடு, இனப்பெருக்கம், எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பு, ஆகியன இவற்றுள் முக்கியமான சில, பறவைகளை அவதானிப்பதன் மூலம் இவற்றை அறிந்து கொள்ளலாம். மேலும், இவ்வாறான அவதானிப்பு ஒரு பொழுது போக்காகவும் அமையும் எனவே நம் மாணவர்கள் பறவைகள் பற்றி ஆராயத் தொடங்கின் அது ஆய்விற்கு வித்திடுவதுடன், அறிவுத் திறனை வளர்க்கும் என்பதிலும் சந்தேகம் இல்லை.

- ச. ஜெயக்குமார்

ஆதாரம்; ஜேர்மன் ட்ரிபியூன்

திசை
THISAI

# திசைமுகம்

"சுதந்திர ஒளியினில் மனங்குளி
அதன்வழி திசையெலாம் துலங்கவே"

## கிறிஸ்மஸ்ஸின் முன் ஒரு கிளர்ச்சி

றுமேனிய நகரான டிமிசோரா இன்னொரு தியனென்மென் ஆகியுள்ளது.

கிறிஸ்மஸுக்குரிய கோலாகல வைபவங்களில் தன்னை மூழ்கடிக்க வேண்டிய இந்நேரத்தில் அது இரத்தக்களரியில் மூழ்கியுள்ளது.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் வெடித்த பழைய கொம்யூனிஸ அடக்குமுறை ஆட்சிக்கெதிரான பெரிஸ்ற்ரோய்கா அலை, இங்கும் வெடித்தபோது அது இரத்த வெள்ளத்தை ஓட வைத்துள்ளது. ஏனைய இடங்களில் ஏற்பட்ட இக் கிளர்ச்சிகள், ஆரோக்கியமான, தேவையான மாற்றத்துக்குரிய வடிகாலாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, சுமுக ஆட்சி மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கையில் இங்குமட்டுமேன் இந்த இரத்தக் களரி?

இங்கு ஆட்சியிலிருக்கும் ஜனாதிபதி நிக்கொலாய் செஸேஸ்கு வித்தியாசமானவர். இவரே ஸ்ரலின்கால அடக்குமுறை ஆட்சியின் எச்ச சொச்சங்களின் மொத்தப் பிரதிநிதியாக இன்றுள்ளார். இந்த வித்தியாசமே இன்றைய ஏனைய கிழக்கைரோப்பிய நாடுகளில் இருந்து றுமேனியாவை வித்தியாசப்படுத்தியுள்ளது.

எழுத்து, பேச்சு சுதந்திரம் என்பது றுமேனியாவில் அறவே இல்லை. ஒருவர் தட்டெழுத்து யந்திரம் வைத்திருப்பதற்கே அனுமதி பெறவேண்டிய அளவுக்கு அங்கே சகல வெளிப்பாட்டுச் சுதந்திரமும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

எல்லாப் பொது இடங்களிலும் ஜனாதிபதியின் படம் மட்டுமே "அதி உத்தமர்" "அறிவு பெற்றவர்" என்ற அடைமொழிகளோடு வைக்கப்பட்டிருக்கிறது.

ஜனாதிபதியின் மனைவியும், சகோதரர்களும், பிள்ளைகளுமே அரச பதவியின் முக்கிய உயர்ந்த இடங்களில் அமர்த்தப்பட்டுள்ளனர். அதனால், ஒரு புதிய "அரச பரம்பரையே" உருவாக்கப்பட்டுள்ளது.

இத்தனைக்கும் மத்தியில் மக்களின் பொருளாதாரத் தேவையாவது தீர்க்கப்பட்டுள்ளதா? மக்கள் தமது அத்தியாவசியப் பொருட்களுக்காகப் பாதையோரங்களில் 'கியூ'வரிசையிலேயே நிற்கவேண்டி உள்ளதில் இருந்து அதன் தன்னிறைவை அறிந்து கொள்ளலாம்.

ஜனாதிபதி செஸேஸ்குவின் கொம்யூனிச அடக்குமுறை ஆட்சி தந்தவை இவைதான்: பசி, பட்டினி, எழுத்து, பேச்சு சுதந்திரம் இன்மை. இதைமீறுவோர் வேட்டையாடப்படுதல்.

இவற்றிலிருந்து விடுபட மக்கள் கிளர்ந்தெழும் போது, சோஷலிஸத்தின் பெயரைச் சொல்லி இரத்தம் தோய்ந்த அடக்குமுறை. ஆனால் இத்தகைய அடக்குமுறைகள் நீடிக்கப் போவதில்லை என்பதையே இந்த ஆண்டின் இறுதியில் கிளர்ந்தெழுந்துள்ள றுமேனியர்களின் இந்த எழுச்சி கோடிகாட்டி நிற்கிறது.

# வரலாறு 1917ஆம் ஆண்டு ஒக்ரோபருடன் நிற்கவில்லை

இலங்கை கொம்யூனிஸ்ட் கட்சி(இடது) பொதுச் செயலாளர் கே. ஏ. சுப்பிரமணியம் அவர்களின் மறைவுக்கான அஞ்சலிக் கூட்டம் மலாயா இலங்கையர் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு சி. கா. செந்திவேல் தலைமை தாங்கினார்.

எம்.கோபாலரத்ணம் பேசியதாவது: "அஞ்சலி உரை நிகழ்த்தியவர்கள் மணியத்தைப் பல கோணங்களிலும் ஆராய்ந்துள்ளனர். எல்லாவற்றிற்கும் மேலாக மனிதநேயம் கொண்ட உயர்வான மனிதர் மணியம்."

ஏ. ஜே. கனகரட்ண பேசியதாவது:"வரலாறு என்னும் மணிக்கூடு 1917 ஆம் ஆண்டு ஒக்ரோபருடன் ஓடாமல்நின்றுவிடவில்லை. பொதுவுடைமை நாடுகளில் எழுத்து, பேச்சு, கருத்துச் சுதந்திரம் போன்ற மேற்கட்டுமானம் சார்ந்த பிரச்சினைகளைச் சுற்றியே கிளர்ச்சிகள் பெருமளவில் தோன்றியுள்ளன. மார்க்ஸீயத்துக்கு எதிரானவர்களுக்கு இந்நிலை குதூகலமளிக்கின்றது. அத்தோடு 'கட்டுப்பெட்டி' மார்க்ஸீய வாதிகளுக்கு இந்நிலை அச்சத்தைக் கொடுக்கலாம். ஆனால், வரலாற்றைப் புரிந்து கொள்பவர்களுக்கு இந்நிலை ஆச்சரியமளிக்காது"

அவர் தொடர்ந்து பேசிய போது, "கீழ் மட்ட மக்களுக்காகவே மணியம்போராடினார். அவர்களே தோழர் மணியத்தின் மறைவால் ஏற்பட்ட தாக்கத்தை எடை போட வேண்டும்" என்றார்.

வேறு பலரும் அஞ்சலி உரை நிகழ்த்தினர்கள்.

## யாழ். பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியக் கல்லூரி

யாழ். பல்கலைக்கழகத்தில் பல் வைத்தியக் கல்லூரி ஒன்று நிறுவப்படவுள்ளது, இக் கல்லூரி பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் அல்லது யாழ். போதனா வைத்திய சாலைக்கு அண்மையில் அமையலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பல்வைத்தியக் கல்லூரி, இலங்கையில் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மாத்திரம் அமைந்துள்ளது. பல் வியாதிகள் தொடர்பாக தேசிய மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வொன்றில், இலங்கையில் மற்ற இனங்களைவிட பல் வியாதி தமிழர்கள் மத்தியில் தான் அதிகமாகக் காணப்படுகிறதாம்.

## மதிய உணவு விநியோகம் அதிபர்கள் வெளியே வர அச்சம்

யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் உணவு விநியோகம் பண ஒதுக்கீடு இல்லை என்ற காரணத்தால் இடை நிறுத்தம் செய்யப்பட்டது 'திசை' வாசகர்கள் அறிந்ததே.

பிள்ளைகளுக்கு மதிய உணவு வழங்கிய பள்ளிக்கூட அதிபர்கள், கடைகளில் கடனாகவே பண்டங்களை வாங்கிச்சமைத்து மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கினர். இக் கடனை நீண்ட நாட்களாக திருப்பிக் கொடுக்காத காரணத்தால், கடைக்காரர் அதிபர்களை விட்ட பாடில்லை. இதனால், சில அதிபர்கள் வெளியில் சுதந்திரமாக நடமாட அஞ்சுகிறார்களாம்.

## லூதர் ஜெயசிங்கம் காலமானார்

யாழ். பல்கலைக் கழகத்தின் முகற் பீடாதிபதியும், முன்னாள் புவியியற் துறைத் தலைவருமான பேராசிரியர் லூதர் ஜெயசிங்கம் அண்மையில் அமெரிக்காவில் காலமானர். இவர் வட்டுக்கோட்டையாழ்ப்பாணக் கல்லூரியின் இயக்குநர் சபையின் தலைவராகவும் கடமையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஞாபகார்த்த கட்டிடம்

யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட உடற் கூற்றியல் கட்டிடத்திற்கு, சமீபத்தில் மறைந்த கலாநிதி ராஜினி திரணகமவின் ஞாபகார்த்தமாக "கலாநிதி ராஜினி திரணகம கட்டிடம்" என்று பெயர் சூட்டப்படவுள்ளது.

ராஜினி மருத்துவ பீடத்தில் உடற்கூற்றியல் தலைவராகக் கடமையாற்றியமை தெரிந்ததே.

## 6வது ....

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பாக பத்திரிகையாளர்களுக்கு பேட்டி அளித்த அன்ரன் பாலசிங்கம், மாகாண அரசு கலைக்கப்பட்டு தேர்தல் நடக்கும் பட்சத்தில், இத்தேர்தலில் சகல தமிழ் அரசியல் குழுக்களும் எதுவித தடையுமின்றிப் பங்குபற்றலாம் என்றும் இதைக் கண்காணிப்பதற்கு சர்வதேச கண்காணிப்புக் குழு தருவிக்கப்படலாம் என்றும் கூறியுள்ளார்.

## உறுதியான ஆதரவு

இந்திய மார்க்சிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சிகள் தமது உறுதியான ஆதரவை வெளிப்படுத்தியுள்ளதோடு புதிய அரசின் உடனடியான தீர்வு காணும் கொள்கைகள் தம்மை ஈர்க்கும் வகையில் அமைந்துள்ளதால் அரசை ஆதரிக்கும் சிறிய கட்சிகளும் உறுதியோடு அரசின் கொள்கைகளை ஆதரிக்க அணிவகுக்குமாறு கோரியுள்ளன.

## அலிக் அலுவிகார யாழ். வருகை

சென்றவாரம் பல்கலைக்கழக மானியக் குழுத் தலைவர் அலிக் அலுவிகார யாழ். பல்கலைக் கழகத்துக்கு தனது முதல் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொண்டிருந்தார். பல்கலைக்கழகத்தில் அவர், உபவேந்தரையும், பல்கலைக்கழக ஆசிரியர்களையும் சந்தித்துக் கலந்துரையாடல் நடத்தினர். அக் கலந்துரையாடலில் அவர் கூறியதாவது: "இலங்கையில் உள்ள பல்கலைக்கழகங்களுக்கு சில அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு பல்கலைக்கழகத்துக்கும் சில கருமங்களைச் செய்வதற்குத் தந்துணிபதிகாரம் உண்டு."

பல்கலைக் கழக மானியக் குழுவின் அனுமதியைப் பெறுமலேயே சில விஷயங்களைப் பல்கலைக் கழகங்கள் செய்யலாமென்றும், எல்லா விஷயங்களுக்கும் மானியக் குழுவின் அநுமதிக்குக் காத்திருக்க வேண்டியதில்லை என்றும் அவர் கூறினர்.

## ஈராண்டுக்கு ஒருமுறை கௌரவ விருது

அறிஞர்கள், கலைஞர்கள், சமூக நிறுவனங்கள் முதலியவற்றின் கருத்தறிந்து, மக்களின் விருப்பமறிந்து, குறிப்பிடப்பட்ட ஒரு துறைக்குத் தம்மை மனப்பூர்வமாக அர்ப்பணித்த மககை ஏற்கும் மூத்த — முதிர்ந்த கலைஞர் ஒருவரை ஈராண்டுக்கு ஒருமுறை தேசிய அடிப்படையில் தெரிவு செய்து, கௌரவ விருதினை 'மகவம்' என்ற அமைப்பு வழங்கி வருகிறது.

அடுத்த ஆண்டுக்கான விருது எத்துறைக்கு, எவருக்கு, ஏன் வழங்கப்பட வேண்டும், என விளக்கி எழுத்து மூலம் யாரும் சிபார்சு செய்யலாம். முகவரி ; மகவம்: மதி அக்கடமி; ஊரெழு, சுன்னாகம்.


## கனடாவில்

### வேலை வாய்ப்புக்கள் VACANCIES

| | | |
|---|---|---|
| ACCOUNTANTS | கணக்காளர் | 1170 CD |
| BOOK-KEEPERS | கணக்குப்பதிவாளர்கள் | 900 CD |
| CHEMISTS | இரசாயனவியலாளர்கள் | 960 CD |
| CLERICAL WORKERS | எழுவினைஞர்கள் | 840 CD |
| DRIVERS | சாரதிகள் | |
| ENGINEERS | பொறியியலாளர்கள் | 1340 CD |
| ELECTRICIANS | எலக்றிஷியன்கள் | 1110 CD |
| FOREMEN | போர்மன்கள் | 1020 CD |
| LABOURERS | தொழிலாளர்கள் | 750 CD |
| MACHINISTS | மெஷினிஸ்ற்ஸ் | 800 CD |

நேர்முகப் பரீட்சையின் பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப் பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப்படிவங்கட்கும் ஏனைய விபரங்கடகும் நேரில் தொடர்புகொள்க.

**AXONT AGENCY**

370, Point Pedro Road, Anaipanthi, JAFFNA

(வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)


இப்பத்திரிகை, இல. 118, 4-ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 22-12-1989இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J 78/89